
nsp



# சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

முனைவர் இல. கோமதி

nsp



# சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

முனைவர் இல. கோமதி

கல்கி பதிப்பகம்

nsp

# சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

© முனைவர் இல.கோமதி

முதல் பதிப்பு: டிசம்பர் 2010
இரண்டாம் பதிப்பு: ஜனவரி 2012

விலை ₹ 45
கல்கி பதிப்பகம் : 9

கல்கி பதிப்பகம்,
பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட்
லிமிடெட்டின் ஓர் அங்கம்.

பதிப்பாளர், ஆசிரியர்: **லக்ஷ்மி நடராஜன்**
பொறுப்பாசிரியர்: **ஆர்.வெங்கடேஷ்**

புகைப்படங்கள் உதவிய
கலைஞர்களுக்கு நன்றி.

**கல்கி பதிப்பகம்**
கல்கி பில்டிங்ஸ்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை 600032
ஆசிரியர் குழு தொ.பே: 91-044-4343 8822
விற்பனை தொ.பே: 91-044-4343 8844
மின்னஞ்சல்: books@kalkiweekly.com
இணையதளம்: www.kalkionline.com

இந்த நூலின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் முன் அனுமதி இன்றி மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் பிற மின் ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கும், மேற்கோள்களுக்கும் இந்த நூலில் இருந்து சிறு பகுதியை எடுத்தாளலாம்.

nsp




# பதிப்புரை

**சி**த்தர்களை வகைப்படுத்துவது மிகவும் கடினம். சொல்லப்போனால், அவர்களை இனங்காணுவதே கூட கடினம். ஆனால், நமது சமூகத்துக்கும் உலகத்துக்கும் அவர்கள் செய்துள்ள பங்களிப்பு அளிப்பரியன. கடவுளை வெளியே தேட வேண்டாம், நம்முடைய உடம்புதான் கடவுளின் சன்னிதானம், அதனைப் போற்றிப் பேணிப் பாதுகாப்பதுவே நம்முடைய தலையாய கடமை என்று நமக்கு உணர்த்தியவர்கள் சித்தர்கள்.

nsp

பல காலங்களில் வாழ்ந்த பல சித்தர்களின் அற்புதமான வரலாறுகள் இந்த நூலில் தொகுத்தளிக்கப்பட்டு இருக்கிறது. முனைவர் இல. கோமதி, கல்லூரி ஒன்றில் முதல்வராக இருப்பவர். அவரது ஈடுபாடும் ஆர்வமும் சித்தர்கள் நமக்களித்துவிட்டுச் சென்ற அரிய கருவூலங்களின் மேல்தான்.

மங்கையர் மலர் இதழில் தொடராக வெளிவந்து பல வாசகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றது ‘சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு.’ அரிய செய்திகளாலும், தெளிந்த நோக்குகளை முன்வைத்ததாலும் இந்தத் தொடர் வாசக அன்பர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. சித்தர்களைப் பற்றிய நிறைவான தகவல்களைக் கொண்டுள்ள இந்த நூலை நீங்கள் பயனுள்ளதாகக் கருதுவீர்கள் என்பது நிச்சயம்.

**ஆர்.வெங்கடேஷ்**
பொறுப்பாசிரியர்

nsp

# முன்னுரை

வாசிக்க விரும்பும் வாசகர்களுக்கு,

- ‘சித்தர்கள்’ - ஆழம் அறிய முடியாத பொருளாழம் மிக்க ஒரு சொல்.
- உலக மாந்தர்களின் அறியாமையைப் போக்கி, நல்வழிப்படுத்த முனைந்தவர்களின் வரிசையில் முதலிடம் பெற்றவர்கள்
- இவ்வுலக வாழ்க்கைக்கும், வானுலக வாழ்க்கைக்கும் வழிகாட்டிகள்
- மருத்துவத்துறையின் முன்னோடிகள்
- முக்காலமும் உணர்ந்த தத்துவஞானிகள்
- யோகக் கலையை உலகுக்கு உணர்த்தியவர்கள்
- சமுதாயச் சீர்திருத்தச் சிற்பிகள்
- இறைமையைத் தமக்குள் கண்டவர்கள்

இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். முதல் வரியில் சொன்னதுபோல, வரையரைக்குள் அடக்கமுடியாத விளக்கங்களைக் கொண்ட சொல் அது. சித்தர்களைப் பற்றியும், அவர்களு டைய வரலாறு, யோகக்கலை, தத்துவம், வாழ்வியல் சிந்தனைகள், மருத்துவம் குறித்தும் பல நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

கடந்த இருபது வருடங்களாக ‘சித்தர் நெறி’ குறித்து ஆர்வமும், ஈடுபாடும் கொண்டு ஆய்வுகள் மேற்கொண்டிருக்கிறேன்.

nsp

என்னுடைய சிற்றறிவுக்கும், அனுபவத்துக்கும் எட்டிய விஷயங்களை, பரதன் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தாரின் வெளியீடான, புகழ்பெற்ற 'மங்கையர் மலர்' மாத இதழில், சித்தர்களைக் குறித்து தொடர் கட்டுரைகள் எழுதி வந்தேன். அக்கட்டுரைகளின் தொகுப்பு இவண், நூல் வடிவில் வெளிவருவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

'சித்தர்-நெறி' என்பது ஒரு பெரிய கடல். அதிலிருந்து சில துளிகளின் தொகுப்பு இந்நூல். என்னைச் சூழ்ந்துள்ள சித்தர்களின் அருளாசி உங்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று அவர்களையே பிரார்த்திக்கின்றேன்.

நன்றி!

அன்புடன்

**இல.கோமதி**

nsp

# நன்றியுரை

**அ**வன் அருளன்றி அணுவும் அசையாது என்னும் நம்பிக்கையை நாளும் என்னுள் வளர்த்துக்கொண்டிருக்கும் எல்லாம் வல்ல முதற் பொருளாம் சிவபெருமானின் திருவடிகளை நன்றியுடன் வணங்கு கிறேன்.

பச்சையப்பன் கல்லூரியின் நான் படித்தபோது, சித்தர் நெறி குறித்து எனக்குக் கற்பித்து, என்னை அதில் ஈடுபடுத்தி, அதன் வழி என் அக வாழ்க்கையின் வளமைக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டியாய் விளங்கும் தமிழ்த்துறை பேராசிரியர். டாக்டர் இரா. மாணிக்க வாசகம் அவர்களது குருவருளுக்கு என் சிரம் தாழ்த்தி, நன்றியை யும் வணக்கத்தையும் காணிக்கையாக்குகிறேன்.

என்னுடைய கட்டுரைகளை வெளியிட்டு, அவற்றை நூல் வடிவில் வெளிக்கொண்டுவர நல் உள்ளம் கொண்ட, பரதன் பப்ளி கேஷன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. லஷ்மி நடராஜன், மங்கையர் மலர் மாத இதழின் பொறுப்பாசிரியர் திருமதி. அனுராதா சேகர் ஆகிய இருவருக்கும் என் உள்ளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூலை மிக நல்ல முறையில் வடிவமைத்து வெளிக் கொண்டு வர உழைத்த, உதவிய, பரதன் பப்ளிகேஷன்ஸ் குழுவினர், அச்சிட்டுக் கொடுத்த அச்சகத்தார், வரவேற்று வாழ்த்திய வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுணர்வுடன் மனதார வணங்குகிறேன்!

**இல.கோமதி.**

nsp

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் யார்? | 9 |
| 2. | கோயில்களில் சித்தர்கள்! | 13 |
| 3. | பதி - னெண் சித்தர்களா? பதி - எண் சித்தர்களா? | 17 |
| 4. | சித்தர் வழி- அது சிறந்த வழி! | 21 |
| 5. | அருள் பாலிக்கும் அகத்தியர்! | 26 |
| 6. | மூலன் தந்த மூவாயிரம் - திருமூலர் | 30 |
| 7. | சீனத்துச் சித்தர் போகர்! | 34 |
| 8. | இன்னல் தீர்த்த இடைக்காட்டுச் சித்தர் | 39 |
| 9. | ஆட்டிப்படைத்த அற்புதர்! | 43 |
| 10. | சிவமே சித்தமென்ற சிவவாக்கியர்! | 47 |
| 11. | கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா! | 51 |
| 12. | தேடி வந்த தேரையர்! | 55 |
| 13. | மகப்பேறு அருளிய மச்சமுனி! | 59 |
| 14. | இரக்கமே இயல்பான இராமலிங்கர்! | 63 |
| 15. | சீரும் சிறப்புமுடைய சித்த மருத்துவம்! | 68 |


nsp

nsp

nsp

nsp

*சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு*

# சித்தர்கள் யார்?

# 1

இல்லற வாழ்க்கையையும், அதன் மீது கொண்ட ஆசையையும் துறந்தவர்களை நாம் துறவிகள் என்கிறோம். சமுதாயத்தைவிட்டு ஒதுங்கி காடுகளுக்கும், மலைகளுக்கும் சென்று தவம் செய்பவர்களை முனிவர்கள் என்கிறோம். வேதங்களை அறிந்து, உலக வாழ்வியல் அறிவையும் பெற்றவர்களை ரிஷிகள் என்கிறோம். துறவி என்பது முதற்படி; முனிவர் என்பது இரண்டாம் படி; ரிஷி என்பது மூன்றாம் படி. இந்த மூன்று படிகளையும் கடந்து நின்று, தேவர்களுக்கு இணையாக உலகத்தில் வாழ்பவர்கள் சித்தர்கள். சித்தர்கள் முக்காலமும் உணர்ந்தவர்கள். இவர்கள் ஒரு தெய்வ இனம். சித்தர்களுக்கு சாதி, மதம், மொழி, நாடு இனம், ஏழை, பணக்காரன் போன்ற வேறுபாடுகள் கிடையாது. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது இவர்களது கொள்கை.

நம் பாரத பூமியில் அநேக சித்தர்கள் வாழ்ந்தனர்; வாழ்ந்தும் வருகின்றனர். இவர்களை அடையாளம் கண்டுபிடிப்பது கடினம். சித்தர் என்று சொன்னவுடன் தாடி வைத்து, சடைமுடி தரித்து, அழுக்கேறிப் போன கோவண உடையுடன் வானத்தை அண்ணாந்து வெறித்துப் பார்க்கும், ஓர் உருவம் நம் மனக்கண் முன் தோன்றுவது இயற்கை. ஆனால், சுத்தமான வெள்ளை உடையுடன், கம்பீரமான தோற்றத்துடன் எல்லோரிடத்திலும் இயல்பாகச் சிரித்துப் பேசிப் பழகி, அன்னதானம் இடைவிடாமல் செய்து, பல பாடல்களை இயற்றி, கவிஞராக வாழ்ந்து, ஜீவ காருண்ய ஒழுக்கத்தைப் போதித்த வடலூர் இராமலிங்க அடிகளும் ஒரு சித்தரே.

nsp

சித்தர்களை, வெளித் தோற்றத்தைக் கொண்டு அடையாளங் காண முடியாது. தோற்றத்தில் அவர்கள் அக்கறை காட்டு வதும் இல்லை. ஆனால், மன ஒருமைப்பாட்டு டன், இறைவனையே எப்போதும் நினைத்து, தனக்குள் இறைவன் இருப்பதை உணர்ந்து 'நீயும் நானுமாய் ஏக போகமாய்' என்று இறை வனுடன் ஒன்றிய நிலை யில் வாழ்பவர்கள் இறை வனின் அருளால் பல சித்திகளை அடைந்தவர் கள். சூழ்நிலைகளைப் பொறுத்து, தேவைப்பட் டால் மட்டுமே தம் சக்தியை, ஆற்றலை வெளிப்படுத்துவர்.

**பொ**துவாக நம் ஊர்களில் காணப்படும் சாமியார்கள் என்பவர் கள் வேறு. கோவை மாவட்டத்தைச் சார்ந்த ஊரில் ஒரு சாமியார் இருந்தார். அவர் தன் னுடைய கையில் கட வுளைக் காட்டுவார். தான் கண்ட கோயில் கருவறைகளை ஒவ் வொன்றாகச் சொல்லி எது வேண்டும் பார் என்பார். அவர் சொல்

# அட்டமா

அணிமா: பெரிய ஒரு பொருளைத் தோற்றத்தில் சிறியதாக ஆக்குவது,

பிருங்கி முனிவர் முத்தேவர்களை மட்டும் வலம் வருவதற்காக சிறு வண்டாக உருமாறினார் என்னும் புராணச் செய்தி அணிமா என்ற சித்தைக் குறிக்கும்.

மகிமா: சிறிய பொருளை பெரிய பொருளாக ஆக்குவது,

வாமன அவதாரத்தில் திருமால் இரண்டடியால் மூன்று உலகங்களை அளந்ததும், கிருஷ்ணன் அருச்சுன னுக்கு உயர்ந்த வடிவம் காட்டி, உலகமே தன்னுள் அடக்கம் என்று காட்டியதும் மகிமா என்னும் சித் தாகும்.

லகிமா: கனமான பொருளை இலேசான பொருளாக ஆக்குவது,

திருநாவுக்கரசரை, சமயப் பகை காரணமாக கல்லில் கட்டி கடலிலிட்ட போது, கல் மிதவையாகி கடலில் மிதந்தது லகிமா என்னும் சித்தமாகும்.

கரிமா: இலேசான பொருளை மிக வும் கனமான பொருளாக ஆக்குவது.

அமர்நீதி நாயனாரிடம் கோவணம் பெறுவதற்காக இறைவன் வந்த போது, ஒரு கோவணத்தின் எடைக்கு தன்னிடம் உள்ள எல்லாப் பொருட் களை வைத்தும் தராசுத் தட்டு சரியா காமல் கடைசியாக தானும், தன் மனைவியும் ஏறி அமர்ந்து சரி செய்த சித்தி கரிமா.

பிராத்தி: எவ்விடத்திலும் தடை

nsp

# சித்துக்கள்

யின்றி சஞ்சாரம் செய்வது.

திருவிளையாடல் புராணத்தில் 'எல்லாம் வல்ல சித்தரான படலம்' என்னும் பகுதியில் சிவன் ஒரே சமயத்தில் நான்கு திசைகளிலும் காட்சியளித்ததாக வரும் சித்தி பிராத்தி.

பிரகாமியம்: வேண்டிய உடலை எடுத்து நினைத்தவரிடத்தில் அப் போதே தோன்றுதல்.

ஔவையாளர் இள வயதிலேயே முதுமை வடிவத்தைப் பெற்றதும், காரைக்கால் அம்மையார் தன்னு டைய அழகான பெண் வடிவத்தை மாற்றி, பேய் வடிவம் பெற்றதும் பிரகாமியம் என்னும் சித்தாகும்.

ஈசத்துவம்: ஐந்து தொழில்களை நடத்துதல்.

திருஞான சம்பந்தர் பூம்பாவைக்கு உயிர் கொடுத்து எழுப்பியமை ஈசத் துவம் சித்தாகும்.

வசித்துவம்: ஏழு வகைத் தோற்றமாகிய தேவ, மானிட,நரக, மிருக, பறப்பன, ஊர்வன, மரம் முதலியவற்றைத் தம் வசப்படுத் துதல்.

திருநாவுக்கரசர் தன்னைக் கொல் வதற்காக வந்த யானையை நிறுத் தியதும், இராமர் ஆல மரத்திலி ருந்து ஒலி செய்து கொண்டிருந்த பறவைகளின் ஓசையை நிறுத்தி யதும், வசித்துவம் என்னும் சித்தாகும்.

லாத கோயில்களைச் காட்டச் சொல்லி கேட் கக் கூடாது. கேட்டால் காட்டவும் முடியாது. இதுபோல போலி வித்தைக்காரர்கள் வேறு. சித்தர்கள் இத் தகைய மாயா ஜால வித்தைகளை வெறுத்து ஒதுக்கியவர்கள். மக் களை தோஷம் என்று ஏமாற்றுவதும், பரிகாரம் என்று சொல்லிப் பணம் பறிப்பதும், முனிவர்கள் போல வேஷமிட்டுத் திரிவதும், சித்தர்களின் செயல்கள் அல்ல.

இடைவிடாது பல காலம் யோக மார்க்கத்தில் ஈடுபட்டு மனத்தை ஒரு நிலைப்படுத்தி, படிப் படியாக இலய யோகம் செய்து (இலயம் என்பது ஒன்றுபடுதல் ஆகும். இறைவனுடன் ஆன்மா ஒன்று படும் பயிற்சி கள் அடங்கியது இலய யோகம்) அட்டமா சித்துக் களை இறைவனருளால் பெற்றவர்கள் சித்தர்கள். இந்தச் சித்துக்களைத் தேவையில்லாமல் ஆடம்பரத்துக்காக அவர்கள் செய்வதில்லை. நாம் செய்வதற்கு அரிய செயல்கள் என்று

nsp

நினைப்பவற்றை சித்தர்கள் சர்வசாதாரணமாகச் செய்வார்கள்!

அட்டமா சித்துக்களையும் கைவரப் பெற்றவர்களே சித்தர்கள். கைவரப் பெற்ற போதிலும் அவற்றைச் சித்தர்கள் விரும்புவதில்லை; வெளிக் காட்டுவதில்லை; அந்த சக்தியைப் பயன்படுத்துவதும் இல்லை.

அட்டமா சித்துக்களின் வெளிப்பாட்டால் இவை போன்ற நிகழ்ச்சி கள் நடக்குமா? அறிவுக்கு ஒத்துவராதவை போலத் தெரிகிறதே என்ற சந்தேகம் எழலாம். அறியாமை, அனுபவம் இல்லாமை, நம்பிக்கை இல்லாமை, மனப்பயிற்சி இல்லாமை, மனம், சொல், செயல்களில் தூய்மை இல்லாமை எல்லாம் பெற்றுள்ள நம்மால், சித்தர்களையும் அவர் தம் சக்தியையும் புரிந்து கொள்ள முடியாதுதான். கடைசி மனிதன் மோட்சம் பெறுகிற வரை நாங்கள் உலகத்தில் இருந்து கொண்டிருப்போம் என்று, ஆலயங்கள்தோறும் அருவ வடிவில் சூட்சும நிலையில் இன்றும் வாழ்ந்து, மனிதர்களுக்கு சக்தியையும் அருளையும் வழங்கிக் கொண்டிருப்பவர்கள் சித்தர்கள். அவர்கள் காட்டிய வழி உன்னதமானது. அவர்களுடைய கொள்கைகளைக் கடைப்பிடித்தால், மனித சமுதாயம் நிச்சயம் மேன்மை அடையும் என்பது உண்மை.

தமிழ்நாட்டில் சித்தர் மரபில் ஒரு சம்பிரதாயம் உண்டு. சிவபெருமான முதல் சித்தராக ஆதி சித்தர் எனும் பெயருடன் வழிபடப்படுகிறார். மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் பிராகாரவலம் வரும்போது எல்லாம் வல்ல சித்தராக சிவபெருமான் அமர்ந்த சன்னிதியைக் காணலாம். கைலாய பரம்பரையில் வந்தவர்கள் தமிழ் சித்தர்கள். தமிழ் சித்தர்களில் திருமூலர், அகத்தியர், சிவவாக்கியர், இடைக்காடர், பாம்பாட்டியார், கொங்கண சித்தர், கடுவெளிச் சித்தர் உள்ளிட்டவர்கள் சிறப்புப் பெற்றவர்கள், சித்தர்கள் மருத்துவம், இரசவாதம், தந்திர சாஸ்திரம், மந்திரம், வானியல், யோகம் முதலிய பல்துறைகளில் கை தேர்ந்தவர்கள். தாம் அறிந்தவற்றை இந்தச் சமுதாயத்தின் முன்னே பாடல்களாக வைத்தனர். கடை விரித்தார்கள். நாம் அவற்றைக் கொள்ளவில்லை என்பதே நிதர்சனம்.

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

# 2

# கோயில்களில் சித்தர்கள்!

"**கோ**யில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பார்கள். இந்தியாவில், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டில்தான் கோயில்கள் அதிகம். ஊர்கள்தோறும் கோயில்கள் இருக்கும்போது திருப்பதியில் மட்டும் ஏன் இவ்வளவு கூட்டம்? திருச்செந்தூரிலும் பழனியிலும் வருஷம் முழுவதும் பக்தர்கள் கூட்டம் அலை மோதுகின்றதே? இது ஏன்? எப்படி? இந்தக் கேள்விகளுக்குப் பதிலைத் தேடுவதற்கு முன் கோயில்களின் அடிப்படைத் தத்துவத்தைப் பார்ப்போம்.

கோயில்களின் கருவறையில் கருங்கல்லினால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் பதிக்கப்பட்டுள்ளன. சிவலிங்கமோ, பெருமாளோ, அம்பாளோ, முருகனோ, உருவங்கள் வேறுபட்டாலும், அவை சாதாரணக் கருங்கற்கள்தான். நம் முன்னோர்கள் ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு சக்கரத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சக்கரத்தை ஒரு செப்புத் தகட்டில் செதுக்கி, அதில் அந்த அந்த மூர்த்திக்குரிய கோணங்களை வரைந்து, கோணங்களுக்குள் அவற்றுக்குரிய எழுத்துக்களை எழுதிவிடுகின்றனர். இந்தச் சக்கரங்களை அடியில் வைத்து, அதன் மீது விக்கிரகங்கள் பதிக்கப்படுகின்றன. அந்த வகையிலான செப்புத் தகடுகளை சங்கரன்கோயிலில் உள்ள கோமதி அம்மன் சன்னிதியில் கரு வறைக்கு வெளிப்புறமாகவே இன்றைக்கும் காணலாம். மக்கள் சிறிது நேரம் அந்தத் தகட்டின் மீது அமர்ந்துவிட்டுச் செல்வர். அந்தத் தகட்டிலிருந்து அருள் சக்தி வெளிப்படுகிறது என்பது பரவலான நம்பிக்கை.

nsp

இவ்வாறு விக்கிரகங்களை, சக்கரங்களின் மீது பதித்த பின்னர், கோயிலுக்குக் கும்பாபிஷேகம் நடத்துவார்கள். கும்பாபிஷேகம் செய்யும்போது யாக சாலை அமைத்து, அதில் ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒரு குடம் வைத்து, அக்குடத்தை முப்புரிநூல் கொண்டு சுற்றி, தண்ணீர் நிரப்பி, மாவிலை, தர்ப்பை, தேங்காய் வைத்து மூர்த்தியை ஆவாஹனம் செய்து மந்திரங்களை ஓதுவார்கள். மந்திரங்கள் சக்தி வாய்ந்த ஒலிக்கூட்டங்கள். மந்திரங்கள் முறையாக ஓதப்படும்போது, அவற்றின் சக்தியைக் குடத்திலுள்ள தண்ணீர் பெற்று விடுகின்றது. கும்பாபிஷேகத்தின் போது அந்தத் தண்ணீரை கர்ப்பக் கிருகத்திலுள்ள மூலமூர்த்திக்கும், அந்த மூர்த்தி அமர்ந்திருக்கும் கோபுரக் கலசத்துக்கும் அபிஷேகம் செய்வார்கள். அப்போது மந்திரங்கள் மூலம் ஆற்றல் பெற்ற நீர், சக்கரங்களுக்கும், அதன் மேல் வைக்கப்பட்டுள்ள விக்கிரகத்துக்கும், அருட்சக்தியை அளிக்கிறது. அதன்பிறகு அந்த மூர்த்தியை மக்கள் சென்று வணங்கும்போது, அந்த விக்கிரகம் அருள் சக்தியை அனைவருக்கும் வழங்குகிறது. அந்த விக்கிரகங்களின் ஆற்றல் குறையாமல் இருக்க, நாள்தோறும் அர்ச்சகர்கள் மந்திரங்களை முறையாக அவற்றின் முனனால் ஓதுகின்றனர்.

**உ**தாரணத்துக்கு ஒரு விஷயம் பார்ப்போம். கார்களில் பாட்டரி இருக்கிறது. அது, உலோகத் தகடுகள், தண்ணீர், ஆசிட் கலந்த கலவை வைக்கப்பட்ட ஒரு பெட்டி. அப்போது அதற்கு சக்தி கிடையாது. அதை டெட் பாட்டரி என்போம். அதனை 35 மணி நேரம் மின்சாரத்தில் வைத்து மின்சார சக்தியை அதில் ஏற்றினால், அது அச்சக்தியைப் பெற்றுவிடுகிறது. பின்னர் கார்களில் வைத்து இணைக்கும்போது தன் சக்தியை முழுமையாக வெளிப்படுத்துகிறது. கார் ஓட, ஓட பாட்டரி சக்தி குறைகிறது. மீண்டும் ரீசார்ஜ் செய்யச் செய்ய முழுமையடைகிறது. இதைப் போலத்தான் கோயிலும்.

நாள்தோறும் கோயிலுக்கு வருகின்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அருள் ஆற்றலை வழங்குவதால் விக்கிரகங்களின் ஆற்றல் நாளா வட்டத்தில் ஓரளவு குறையக் கூடும். மக்கள் மனத்தில் எத்தனையோ எண்ணங்கள், எதிர்மறையான கருத்து வேறுபாடுகள் உள்ளதால் விக்கிரகங்களுக்கு சக்தி இழப்பு நேரலாம். இதனை ஈடு கட்ட பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடத்தப்படுகிறது. சிதிலமடைந்து போன கோயில்களைப்

nsp

புதுப்பித்து, வர்ணம் பூசி, புது மெருகேற்றுவதற்காகவும், கும்பாபிஷேகம் நடத்தப்படுகிறது. எனினும், விக்கிரகங்களுக்கு முழுமையான அருள்சக்தியை வழங்க வேண்டும் என்பதே கும்பாபிஷேகத்தின் முக்கிய நோக்கம். எனவேதான் கும்பாபிஷேகம் நடந்து 48 நாட்களுக்குள் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்னும் ஓர் உறுதியான நம்பிக்கை மக்களிடையே இருந்து வருகிறது. அப்போது விக்கிரகங்கள் முழு சக்தியுடன் விளங்குகின்றன.

**கோ**யிலுக்குப் போகும்போது குளித்து, முடித்து ஸ்தோத்திரப் பாடல்களை ஜபித்துக்கொண்டு, உடலும், மனமும் தூய்மையாக இருக்க வேண்டும். தேவையில்லாத எண்ணங்கள், சண்டை, வாக்குவாதம் கூடாது என்று நம் வீட்டிலுள்ள பெரியவர்கள் சொல் வார்கள். அதற்குக் காரணம் என்ன தெரியுமா?

விக்கிரகங்களிலிருந்து வெளிப்படும் அருள் சக்தியை நம்முடைய மனமும், உடலும், தூய்மையாய் இருந்தால் மட் டுமே கிரகித்துக்கொள்ள முடியும். இது இவ்வாறு இருக்க எல்லாக் கோயில்களிலும் உள்ள விக்கிரகங்களின் அமைப்பு ஒன்றாகவேதானே உள்ளது. சிவபெருமானின் சிவலிங்கத் திருமேனியின் அமைப்பு எல்லாக் கோயில்களிலும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது. குடியமர்ந்துள்ள குமரனின் வடிவம் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது. வேறு வேறு பெயர்களில் வணங்கப்படும் அம்பிகையின் உருவ அமைப்பும் எல்லாக் கோயில்களிலும் ஒரே மாதிரியாகத்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது. விக்கிரகங்களை ஆவாஹிக்கும் முறையும் ஒரே மாதிரிதான் நடைபெறுகிறது. பின்னர் எப்படி பழனி, திருப்பதி, திருச்செந்தூர், திருவண்ணாமலை, மதுரை, வைத்தீஸ்வரன் கோயில், காஞ்சிபுரம், மருதமலை உள்ளிட்ட இடங்களில் உள்ள கோயில்கள் இவ்வளவு சாந்நித்யம் பெற்றுள்ளன?

**ப**ழனிக்கு நூறு பேர் போகிறார்கள் என்றால், 90 பேருக்கு போகரைப் பற்றித் தெரியாது. திருச்செந்தூருக்குப் போகிறவர்களுக்கு பஞ்ச சித்தர்களைப் பற்றித் தெரியாது. திருப்பதிக்குப் போகிறவர்களில் ஒரு சில பேருக்குக்கூட கோரக்கரைப் பற்றித் தெரியாது. ஏதோ சிலர் விஷயம் தெரிந்தவர்கள் மட்டும் பழனியில் போகர் சமாதிக்குச் சென்று வணங்கிவிட்டு வருவார்கள். பழனியில் போகர், திருவண்ணாமலையில் இடைக் காடர், மருதமலையில் பாம்பாட்டிச் சித்தர், வைத்தீஸ்வரன் கோயிலில் தன்வந்திரி,

nsp

திருப்பரங்குன்றத்தில் மச்சமுனி, அழகர் மலையில் அகப் பேய்ச் சித்தர், திருப்பதியில் கோரக்கர், எட்டுக்குடியில் வால்மீகர், திருவரங்கத்தில் சட்டநாதர், திருச்செந்தூரில் பஞ்ச சித்தர்கள். என அந்த இடங்களில் உள்ள கோயில்களில் சித்தர்கள் அடக்கமாகி இருக்கின்றனர்.

சித்தர்கள் முக்தி அடைந்த இடங்களிலிருந்து, பிற்காலத்தில் சி வலிங்கம் அல்லது அம்பிகையின் வடிவம் சுயம்புவாக வெளிப் பட்டது. அந்த இடங்களே புகழ்பெற்ற கோயில்களாக உருவாகின. சித்தர்கள் தாங்கள் அடக்கமான கோயில்களில் சூக்கும நிலையில் இன்றும் இருக்கின்றார்கள். அங்கு வரும் மக்களுக்குத் தொடர்ந்து அருள் சக்தியை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இடங்கள் மக்களை ஈர்க்கின்றன. மக்கள் கூட்டம் குறையாமல், தங்கள் வேண்டுதல் நிறைவேறிவிட்டதற்காகவும், மேலும் அருளை நாடியும் இந்த க்ஷேத்திரங்களுக்குச் செல்கின்றனர். இந்தக் கோயில்களின் மகிமைக்கும், பிரசித்திக்கும் சித்தர்களே காரணம்.

சித்தர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதில்லை. சிவபெருமானே முதல் சித்தரானதால், சிவபெருமானின் அருளாணைப்படி என்றைக்கும் சூட்சூமமாக, அருள் ஆற்றலாக, மீண்டும், மீண்டும் பிறவி எடுக்கும் நிலையை விட்டு அகன்று, பிறவாப் பெருநிலையில் நிலைத்து நிற்கிறார்கள்.

nsp

# பதி - னெண் சித்தர்களா? பதி - எண் சித்தர்களா?

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

**3**

தேவர்களை முப்பது முக்கோடி தேவர்கள் என்று சொல்வார்கள். தமிழ்த் திருமணங்களின்போது திருமண பந்தத்தை உறுதி செய்கையில் ‘முப்பது முக்கோடி தேவர்கள் சாட்சியாக’ என்று கூறுவது வழக்கம். இதைப் போலவே சித்தர்களை பதினெட்டு சித்தர்கள் என்று குறிப்பிடுவது மரபு.

வடநாட்டில் நவநாத சித்தர்கள் என்று ஒரு பரம்பரையுண்டு. ‘நவம்’ என்னும் சொல் ஒன்பது என்ற எண்ணையும் குறிக்கும். புதுமை என்னும் அர்த்தத்தையும் குறிக்கும். நாதர் என்றால் தலைவர் என்று பொருள். சிவபெருமானே ஆதிநாதர் ஆவார். இறைவனை ஆனந்தமயமாக எண்ணித் தொழுதவர்கள் தம் பெயரின் பின்னால் ‘ஆனந்தர்’ என்று சேர்த்துக் கொள்கிறார்கள். சிவானந்தர், தயானந்தர், தத்பவானந்தர், சின்மயானந்தர் முதலிய பெயர்களைக் காணலாம்.

இறைவனை நாதரூபமாகத் தொழுதவர்கள் தம் பெயரின் பின்னே ‘நாதர்’ என்று சேர்த்துக்கொண்டு சத்யநாதர், அனாதிநாதர், வகுளிநாதர், மதங்க நாதர் என வழங்கப்பட்டனர். நாதரூபியாக ஒரு புதிய கருத்தில், கோணத்தில் இறைவனை வழிபட்டமையால் ‘புதுமை இயக்கத் தலைவர்கள்’ என்னும் பொருள் பட நவநாதர்கள் என்று அழைக்கப்பட்டனரே தவிர, நவம் - ஒன்பது என்ற பொருள் கொண்டு ஒன்பது நாதர்கள் என்னும் கருத்து பொருத்தமானதாக இல்லை. இந்த இயக்கத்தில் ஒன்பது பேர் சிறப்புப் பெற்றவர்களாக இருந்திருக்கலாம்.

இதைப் போல பதினெட்டு சித்தர்கள் என்ற தொடரில்

nsp

பதினெட்டு என்ற சொல் எண்ணிக்கையை மட்டும் வைத்துச் சொல்லப்பட்டதாக முடிவு செய்ய முடியாது. மரபு வழியில் வந்த சொல்லாகவே தோன்றுகிறது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்த சித்தர்கள் பதினெட்டு பேராக இருக்க முடியாது. சித்தர்கள் அநேகம் பேர் இருந்திருக்க வேண்டும் என்ற உண்மை, சித்தர் பாடல்களிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது. அவர்களுடைய பெயரும், வாழ்ந்த இடமும், காலமும், வரலாறு பற்றிய செய்திகளும் ஆதாரப்பூர்வமாக நமக்குக் கிடைக்கவில்லை. சித்தர்களுக்குக் கால எல்லையோ, இட எல்லையோ வரையறுக்க முடியாது என்ற உண்மையை நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

சித்தர்கள் அநேகம்பேர் இருந்தபோது, பதினெட்டு சித்தர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வதன் காரணம் என்ன? ஒரு வேளை சித்தர் கூட்டத்தில் பதினெட்டு பேர் தலைவர்களாக இருந்திருப்பார்களோ? அல்லது சிறப்புப் பெற்றவர்களாக இருந்திருப்பார்களோ? என்று நினைத்து, அந்தப் பதினெட்டு பேர் யார் யார் என்று பார்க்கின்றபோது, ஒவ்வொரு பட்டியலிலும் பதினெட்டு பெயர்கள் வேறுவேறாக இருக்கின்றன. ஆக மொத்தம் முப்பது முதல் முப்பத்தைந்து சித்தர்கள் சிறப்புடையவர்களாக இருந்திருக்கிறார்கள்.

nsp

தமிழ்நாட்டை ஆட்சி செய்த சேர, சோழ, பாண்டிய அரசர்களில் அநேகம் பேர் வள்ளல்களாக இருந்திருக்கிறார்கள். ஏழைகளுக்கும், புலவர்களுக்கும், பொன்னையும், பொருளையும், ஏராளமான செல்வத்தையும், யானைகளையும் குதிரைகளையும் பரிசாகக் கொடுத்துள்ளார்கள். ஆனால், அவர்கள் எல்லோரையும் நாம் வள்ளல்கள் என்று சொல்வதில்லை.

முல்லைக்கொடி படருவதற்குத் தன் தேரையே கொடுத்த பாரி, குளிரில் வாடிய மயிலுக்குப் போர்வை தந்த பேகன், நீண்ட காலம் வாழ வைக்கும் அதிசயமான நெல்லிக்கனியை, தான் சாப்பிடாமல் தமிழை வாழ வைக்க ஔவையாருக்கு அளித்த அதியமான், இசை, நடனக் கலைஞர்களின் வாழ்க்கைக்குத் தன் நாட்டின் ஒரு பகுதியைத் தானமாகக் கொடுத்த ஓரி, ஏழைகளின் வாழ்க்கைக்கு ஏராளமான பொற்காசுகளை அள்ளித் தந்த நள்ளி, தன்னைப் புகழ்ந்து பாடிய புலவனுக்கு ஓர் ஊரையே வழங்கிய ஆய் அண்டிரன், தன் நாட்டில் வாழ்ந்த ஆதரவற்றவர்களுக்காகத்

nsp

தன் நாட்டின் ஒரு பகுதியை அளித்த காரி ஆகிய இவர்களைத்தான் நாம் கடையேழு வள்ளல்கள் எனப் புகழ்கின்றோம். இவர்கள் பெரிய பெரிய நாட்டை ஆண்ட சக்கரவர்த்திகள் அல்லர், ஒரு சிறிய நிலப் பகுதியை ஆட்சி செய்த குறுநில மன்னர்கள்தாம். ஆனால் ஒவ்வொருவரும் தானம் கொடுப்பதில் ஒவ்வொரு வகையில் சிறப்பு பெற்றவர்கள். எனவே சரித்திரத்தில் இடம் பெற்றார்கள். இதைப் போலவே சித்தர்கள் அநேகம் பேர் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களில் தனிச் சிறப்பு பெற்றவர்கள் பதினெட்டு பேராக இருக்கலாம். அப்படியே ஆனாலும் பதினெட்டு சித்தர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றாக இல்லை. அவர்கள் ஒரே கால கட்டத்தில் வாழ்ந்திருக்கவில்லை. அப்படி இருக்கும்போது பதினெட்டு என்ற சொல் எப்படி வந்தது?

**ந**ம்முடைய புராணங்களிலும், இலக்கிய வரலாற்றிலும், எண் சாஸ்திரத்திலும் 18 என்ற எண்ணுக்குப் பல சிறப்புகள் உண்டு. 18 என்பது, 9ம் எண்ணின் பெருகக்குத் தொகை $9 \times 2 = 18$. அதேசமயம் $1 + 8$ஐக் கூட்டினால் 9ம் எண் வரும். அதேபோல 9ம் எண்ணின் பெருக்குத் தொகையான 27, 36, 45, 54, 63, 72, 81, 90, 108, 117 ஆகிய எண்களின் இலக்கங்களைக் கூட்டினால் 2+7, 3+6, 4+5, ........ 9 என்ற எண் வரும்.

தேவ கணங்களின் எண்ணிக்கை மொத்தம் 18. யுகங்களின் எண்ணிக்கை 18. தமிழ்நாட்டின் இசைக்கருவிகளின் வகைகள் 18. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடைபெற்ற தேவாசுரப்போர் 18 ஆண்டுகள் நடைபெற்றது. இராமாயணத்தில் இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போர் 18 மாதங்கள் நடந்தது. மகாபாரத யுத்தம் 18 நாட்கள் நடந்தது. சேர அரசன் செங்குட்டுவனுக்கும், வட நாட்டை ஆண்ட கனக விசயர்க்கும் நடந்த போர் 18 நாழிகை நடைபெற்றது.

ஆடி மாதத்தின் 18ம் நாளை, ஆடி 18-ம் பெருக்கு என்று சிறப்பாகத் தமிழ்நாட்டில் கொண்டாடுகிறார்கள். வேதங்களின் விளக்கமாக இருக்கும் ஆகமங்கள் மொத்தம் 18 ஆகும். தமிழ் இலக்கியத்தில் 18 நூல்களை பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்றும், 18 நூல்களை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் வரிசைப்படுத்தி வைத்துள்ளனர். தமிழின் மெய்யெழுத்துக்கள் 18. சபரி மலையின் படிக்கட்டுகள் 18, இவ்வாறு 18 என்ற எண்ணின் சிறப்புப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

மற்றொரு சிறப்பு 18 என்ற எண்ணின் கூட்டுத் தொகையான 9

nsp

என்ற எண், சோதிட சாஸ்திரத்தில் கேது என்னும் கிரகத்துக்குரியது. கேது, பாபகிரகம் என்று சொல்லப்படுகிறது. அதே சமயம் ஞானகாரகன் கேது என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. 9 என்னும் கூட்டுத்தொகையை உடைய 18 என்ற எண்ணும் ஞானத்துக்கு உரியதே. சித்தர்கள் ஞானிகள். அதனால் பதினெட்டு சித்தர்கள் என்று கூறும் மரபு ஏற்பட்டிருக்கலாம். அப்படி என்றால் 9 என்னும் கூட்டுத்தொகையை உடைய 27, 36,45, 54 முதலிய எண்களைச் சொல்லியிருக்கலாமே. ஏன் பதினெட்டு என்று குறிக்க வேண்டும் என்ற சந்தேகம் வருகிறது.

பதினெட்டு தேவ கணங்களுள் சித்தர் கணமும் ஒன்று. கணம் என்பது ஒரு கூட்டம், தொகுதி, தொகுப்பு என்று பொருள் தரும். பதி என்பது தலைவன் என்று பொருள்படும். எனவேதான் தேவகணங்களுக்குத் தலைவரை கணபதி என்று வணங்குகிறோம். இதேபோல சித்தர்கள் தங்கள் தலைவனான பதியைத் தமக்குள் உணர்ந்து தெளிவு பெற்றவர்கள். எனவே பதினெட்டு சித்தர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

**த**மிழில் காலம் மாற மாற சொற்கள் பல மாறுபட்டிருக்கின்றன. உதாரணமாக ஒரு மண்டலம் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் பொன் போல் ஒளி வீசும் என்று சித்த மருத்துவம் சொல்லுகின்ற மூலிகை 'பொன் ஆகும் காண்' என்னும் கீரை வகை. இப்போது பொன்னாங்கண்ணிக்கீரை என்று சொல்லப்படுகிறது. வாத சம்பந்தமான நோய்களைத் தீர்க்கும் குணம் கொண்ட முடக்குவாதத் தான் என்னும் கீரை முடக்கத்தான் என்று பெயர் மாறிப் பழக்கத்தில் உள்ளது.

சித்தர்கள் இறைவனைப் பதி தலைவன் எனறு அழைத்தனர். எப்பொழுதும் இறைவனையே நினைத்து, பதி - நிலையை அதாவது இறைவனடியைச் சென்றடைய வேண்டும் என்ற முயற்சியுடன் செயல்பட்டவர்கள். பதி-னெட்டு சித்தர்கள்; பதியினை எண்ணி, உணர்ந்து பதி நிலையை எட்டியவர்கள் என்கிற அர்த்தத்தோடு பதி-யெட்டு சித்தர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். காலப்போக்கில், பதினெட்டு சித்தர்கள் என்று மாறியிருக்கக் கூடும். எப்படி இருந்தாலும் சித்தர்கள் அநேகம் பேர் இருந்திருக்கின்றனர்; இருக்கின்றனர் என்பது உண்மை.

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

**4**

# சித்தர் வழி- அது சிறந்த வழி!

"தீராத ஒற்றைத் தலைவலியா? சைனஸ் பிரச்னையா? முதுகுவலியா, மனச்சோர்வா? மன அழுத்தமா? யோகா கிளாஸ் போயேன்" என்று எல்லோரும் அட்வைஸ் செய்கிற காலமிது. ஆழ்மனம் சம்பந்தப்பட்ட பல பிரச்னைகளுக்கும், உடல் சார்ந்த உபாதைகளுக்கும் யோகப் பயிற்சிகள் தீர்வு அளிக்கின்றன. இத்தகைய பிரச்னைகள் வராமலேயே தடுக்கும் ஆற்றலும் கொண்டது யோகக்கலை.

nsp

இந்த யோகக் கலையை உலகத்துக்கு அளித்தவர்கள் நம் சித்தர்கள். யோகக் கலையின் வழி நின்று, இறைவனைத் தமக்குள் உணர்ந்தவர்கள் சித்தர்கள். யோக நெறியே சித்தர்கள் மேற்கொண்ட இறை வழிபாட்டு முறை, யோகம் என்பது, இறைவனை நமக்குக் காட்டும் இயற்கையின் கண்டுபிடிப்பு. இது மனித ஆற்றலின் எல்லைகளைப் பெருக்கி, மனிதனை இறை நிலைக்கு உயர்த்துகின்ற கருவி, யோகா என்பது கை கால்களை மடக்கி நீட்டி மூச்சை உள்ளே இழுத்து பின் வெளியே விட்டு செய்யப்படும் ஆசனங்களோ, பயிற்சிகளோ மட்டுமில்லை. காலையில் ஒரு மணிநேரம், யோகப் பயிற்சிகள் செய்துவிட்டு மீதி நாள் முழுவதும் இஷ்டப்பட்ட நேரத்தில் விரும்பினதை எல்லாம் சாப்பிட்டு, தூங்கி எழுந்து, ஓர் ஒழுங்குமுறை இல்லாமல், தேவையில்லாத பழக்கவழக்கங்கள் பழகி, கோபம், பொறாமை, பொய், பேராசை போன்ற எதிர்மறை எண்ணங்களும் செயல்களும் கொண்டு வாழ்ந்தால் யோகாவினால் முழுமையான பலன் கிடைப்பதில்லை.

சித்தர்கள் உலகத்துக்கு அளித்த மிக அற்புதமான யோகக் கலை,

nsp

'அஷ்டாங்க யோகம்' எனப்படும். அஷ்டம் என்றால் எட்டு என்று அர்த்தம். அமாவாசைக்குப் பிறகும், பௌர்ணமிக்குப் பிறகும் வருகிற எட்டாம் நாளை அஷ்டமி என்று சொல்லுகிறோமல்லவா? எட்டு படி நிலைகளைக் கொண்டது அஷ்டாங்க யோகம். இந்த எட்டுபடி நிலைகளையும் முறையாக, முழுமையாக செய்தோமானால், அவை நம்முடைய உடல், மனம், ஆன்மா ஆகியவற்றைத் தூய்மைப்படுத்தி இறுதியில் மோட்சம் பெற வழி செய்யும். இறைவனோடு லயிக்கக் கூடிய வழியாதலால் இலய யோகம் என்றும் பெயர் பெறுகிறது. ஆனால், இந்தப் படிநிலைகளை அதற்குரிய ஆசாரங்களோடு முறையாக முழுமையாக மேற்கொள்ள வேண்டும்.

## அஷ்டாங்க யோகப் படிகள்

### *1. இயமம்:*

'இயமம்' என்ற சொல், தீயனவற்றில் மனம் செல்லாது கட்டுப்படுத்துதல் என்று பொருள்படும்.

இயமம் என்பது பிற உயிர்களை மனம், சொல், செயல்களினால் துன்புறுத்தாமல் இருத்தல்; உண்மையைப் பேசுதல்; பிறர் பொருட்களின் மீது ஆசை வைத்து அபகரிக்காமல் இருத்தல்; தன் மனைவியைத் தவிர, அல்லது தன் கணவரைத் தவிர பிற பெண்களை (அ) ஆடவரை மனத்தில் நினைக்காமல் இருத்தல்; கோபத்தை நீக்கிப் பொறுமையுடன் இருத்தல்; செய்யும் செயல்களில் நேர்மையுடன் நடத்தல்; குறித்த நேரத்தில் அளவான சாத்விக உணவு உண்ணுதல்; மேற்கண்ட விதிகளை எப்போதும் பின்பற்ற வேண்டும் என்று உறுதியுடன் இருத்தல்.

அஷ்டாங்க யோகத்தின் முதல்படி உடலையும், மனத்தையும் தூய்மைப்படுத்துகிறது. இப்படி நம் முழுமனத்தோடு செயல்படுவோமேயானால் இயமம் என்னும் படி நிலையைக் கடக்கலாம். மேலே கூறப்பட்டுள்ள விதிகளின் படி மனிதன் வாழ்க்கை நடத்தினால் வாழ்வே தவமாகி விடுகிறது. தவம் என்று தனியாக எதுவும் செய்ய வேண்டியதில்லை.

### *2. நியமம்:*

'நியமம்' என்பது விதிமுறைகளை உறுதியுடன் கடைப்பிடித்தலாகும். முதல்படியான இயமத்தை முறையாகச் செய்தால், நியமம் தானாக நிறைவேறி விடும்.

'நியமம்' என்பது, மேற்கண்ட விதிகளின்படி நடக்கையில், நாம்

nsp

இந்தப் பிறவியில் பெற்றிருக்கும் வரங்களை நினைத்து அவற்றின் அருமையை உணர்ந்து மன நிறைவு அடைய வேண்டும். இப்படி வாழும்போது 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுந்து மந்திரத்தை முறையாக ஜபிக்க வேண்டும்.

நல்ல உணவுப் பழக்கங்களாலும் தூய்மையான எண்ணங்களோடும் கூடிய வாழ்க்கையினாலும் இயமம், நியமம் என்னும் நிலைகளின் நிற்போருக்கு மனமும் உடலும் தூய்மை பெற்று இலேசாகிவிடும். பாஸிட்டிவ் எனர்ஜி அதிகமாகும். எதிர்மறை ஆற்றல் வெளியேறும்.

**3. ஆசனம்:**

'அடுத்த நிலை ஆசனம். அஷ்டாங்க யோகத்தின் கடைசி நிலைகளான தாரணை, தியானம் ஆகிய நிலைகளின் போது உடல் நீண்ட நேரம் அசைவற்று ஒரு நிலையில் இருக்க வேண்டும். அதற்கான பயிற்சிகள் அடங்கியது ஆசனம். இவை உடலுக்கும் மன ஒருமைப்பாட்டுக்கும் அளிக்கப்படுகின்ற பயிற்சிகள். சித்தர்கள் மொத்தம் 126 ஆசனங்களைக் குறிப்பிடுகின்றார்கள். அவற்றுள் ஏழு ஆசனங்கள் முக்கியமானவை. இவற்றை அதிகாலையில், சூரிய உதயத்துக்கு முன், வெறும் வயிற்றில் செய்வது உத்தமம். பின்னால் வரும் தியானம், சமாதி ஆகிய நிலைகளுக்கு இந்த இயமம், நியமம், ஆசன நிலைகள் ஆரம்பப்படிகளாக அமையும். இம்மூன்று நிலைகளாலும் உடல் உறுப்புக்கள் முழுமையாக, சீராக இயங்கும். உடல் உறுதி பெறும். மன வலிமையும் அமைதியும் கிடைக்கும்.

**4. பிராணாயாமம்:**

நான்காவது நிலை பிராணாயாமம். முறையான மூச்சுப் பயிற்சி ஆகும். முறைப்படி பிராணாயாமம் செய்யும்போது நம்முடைய நுரையீரல் முழுமையாக இயங்கும். உடல் முழுவதும் இரத்த ஓட்டம் சீராகும். நோய் நொடிகள் அண்டாது.

**5. பிரத்தியாகாரம்:**

அடுத்த நிலையான பிரத்தியாகாரம் என்பது மனம் ஒருமித்த நிலை. ஒரு நிமிடம் கண்களை மூடி உட்கார்ந்து பாருங்கள். எத்தனை எண்ணங்கள்! எத்தனை காட்சிகள்! நம் மனத்தில் படம் போல ஓடுகின்றன. இவை எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு இறைவனை

nsp

ஒருநிமிடம் முழுதாக நம்மால் நினைக்க முடியுமா? முடியும்! நமக்குப் பிடித்த ஒரு உணவுப் பண்டத்தையோ, அல்லது நாம் அன்பும் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ள மனிதரையோ நாம் அடிக்கடி நினைத்துப் பார்ப்போம் அல்லவா? அது போலத்தான் இறைவனும். இறைவனை நினைப்பது ஒரு மகிழ்ச்சியான நிறைவான அனுபவம். முதல் நான்கு யோக நிலைகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு நிமிடம் என்ன! ஒரு நாள் முழுவதும் சிந்தனையை இறைவன்பால் வைக்க முடியும்.

### 6. தாரணை:

'**தா**ரணை' என்னும் நிலை, இறைவன்பால் நிலைநிறுத்திய மனத்தை, மீண்டும் புலன்களின் வழி அலைய விடாமல் தடுத்து இறைவனையே நினைந்திருக்கும் நிலையாகும். சித்தர்கள், உருவம் எதுவும் இல்லாத சிவம் என்னும் கருத்துப் படிவ நிலையை (God in conceptual form) தியானிப்பார்கள். மனிதர்களாகிய நாம், நம்முடைய இஷ்ட தெய்வத்தின் மீது கருத்தைச் செலுத்தி, முருகரோ, விநாயகரோ, பெருமாளோ, அன்னையோ, சிவ லிங்கமோ, இயேசுவோ, புத்தரோ அந்த உருவத்தை மனத்தில் பதிய வைத்து முடிந்தபோதெல்லாம், பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போதோ, அல்லது காலை நடைப் பயிற்சியின்போதோ, அல்லது எதற்காகவாவது காத்திருக்கும்போதோ, வேறு எதையும் எண்ணாமல், அந்த வடிவத்திலேயே மனத்தை நிலை பெறச் செய்து சுலோகங்களை மனத்தில் சொல்லிக் கொண்டிருக்கலாம். வாய்விட்டுச் சொல்லுதல் உசிதம் அல்ல.

தாரணை என்னும் நிலையில் இருப்பவர்களுக்கு கண்கள் ஒளியுடன் இருக்கும். முகம் தெளிவு அடையும். மனமும், உடலும் இலேசாகி, தூய்மையாகி, சலனங்கள் எதுவும் இல்லாமல் இருக்கும். யோகியர்களின் நிலையை அடையலாம். ஏகாந்தமான ஆனந்த அனுபவ நிலை இது. மன அழுத்தம், ஆசை, கோபம், பயம், படபடப்பு, சந்தேகம், சோர்வு, பொய், புரட்டு, கனவு, ஏமாற்றம் ஆகிய இவை எல்லாம் நம்மைவிட்டுப் போய்விடும். தெளிவு, மனநிறைவு, மகிழ்ச்சி, இறைவன் நமக்கு அருகில் இருப்பது போன்ற உணர்வு இவை எல்லாம் கைவரப் பெற்று வாழும் நிலை இது. சொற்களால் இதற்கு மேல் விளக்க முடியாது. அனுபவித்தால் மட்டுமே முழுமையாகப் புரிந்து கொள்ளக்கூடிய நிலை இது.

**7. தியானம்:**

'**தி**யானம்' என்பது யோகா வகுப்புக்களில் கற்றுத்தரப்படும் பயிற்சியின் மிகவும் முதிர்ச்சியான, முழுமையான இறுதி நிலை. மனத்தில் பதிய வைத்த இறை உருவத்துடன் முழுமையான தொடர்பு கொள்ளும் நிலை. இந்நிலையில் உடல் அசைவுகள் இருக் காது. ஐந்து புலன்களும் செயல்படாது ஒடுங்கும். உணவு, கழிப்பு எதுவும் வேண்டியதிருக்காது. மூச்சு மட்டும் மெல்லிய ஓட்டமாக சீராகச் சென்று கொண்டிருக்கும். திருவண்ணாமலைக் கோயிலில் பாதாள அறையில் ரமண பகவான் தியான நிலையில் இருந்தபோது, அவர் உடலைச் சுற்றி கரையான் புற்று படர்ந்தது. ரமணரோ உடல் பிரக்ஞை சிறிதும் இல்லாது தியானத்தில் இருந்தார். தியான நிலையில் நிற்கும் ஞானியர் முக்காலமும் உணர்ந்திருப்பார்கள். இது ஒரு ஞானப் பக்குவ நிலை. அஷ்டாங்க யோகத்தின் முதல் ஆறு நிலைகளில் முழுமையாக ஈடுபாட்டுடன், தொடர்ந்து இருப்பவர் களுக்கு மட்டுமே இறையருளுடன் கூடிய தியான நிலை கைகூடும்.

**8. சமாதி:**

'**ச**மாதி' என்னும் இறுதி நிலை - ஒரு இறையனுபவம். உடல் அசைவற்று, உயிர் இயக்கம் நின்றுவிடும். தானே இறைமயமாகி நிற்கும் நிலை இது. உயிர் இறைவனோடு கலந்துவிடும் மோட்ச நிலை இது.

சித்தர்கள், தமக்கு சமாதி நிலை எப்போது கைகூடும் என்பதை முன்பே அறிந்திருப்பார்கள். அஷ்டாங்க யோகத்தின் இறுதிப் படி நிலைகளைக் கடக்கும்போது சித்தர்களுக்கு அஷ்டமா சித்துக்கள் கைகூடும்.

சித்தர்களின் அஷ்டாங்க யோகம் படிப்படியாக மனிதனின் உடல், மனம், ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி, உலகத்தில் முறையான வாழ்க்கையைக் கற்றுத் தந்து, இறுதியாக மோட்ச நிலையையும் அளிக்கும் வல்மை உடையது. சமயம், சாதி, மொழி, இனம் ஆகிய பிரிவுகளைக் கடந்து நிற்பது, இல்லறத்தில் இருப்போருக்கும் மோட்ச வழியைக் காட்டுவது. மனிதப் பிறவியின் குறிக்கோள் மீண்டும், மீண்டும் பிறக்காமல் இறைவனைச் சென்று சேர வேண் டும் என்பது. அதனை நிறைவேற்றுவது அஷ்டாங்க யோகம். (இதன் விளக்கங்களைத் திருமூலர் இயற்றிய திருமந்திரம் - மூன்றாம் தந்திரத்தில் காணலாம்) நாம் அனைவரும் இதனைப் பின்பற்றி நற்கதி அடைய வேண்டும் என்பது சித்தர்களின் வேண்டுகோள், விருப்பமும் கூட.

nsp

*சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு*

**5**

# அருள் பாலிக்கும் அகத்தியர்!

சித்தர்களின் தலைவரான சிவபெருமானையடுத்து, பழம் பெரும் வரலாற்றினையுடையவர் அகத்தியர். இவர் சித்தர்களில் தலைமைச் சிறப்புடையவர். அகத்தியருக்கு கும்பமுனி, அகத்தீசர், பொதிகைமுனி, தட்சிணாமூர்த்தி, கும்பமூர்த்தி எனப் பல பெயர்கள் உள்ளன. வேத காலக் கதை ஒன்று இப்படி இருக்கிறது.

தேவர்களின் தலைவர்களுள் ஒருவரான மித்ரனும், கடலுக்கு அரசனான வருணனும், தேவலோகத்து மங்கையான ஊர்வசி மீது மோகங் கொண்டனர். அதன் காரணமாக தமது இந்திரியத்தை மித்ரன் ஒரு கும்பத்திலும் (மண் குடம்) வருணன் கடலிலும் செலுத்தினார்கள். உரிய காலம் கடந்த பிறகு கும்பத்திலிருந்து அகத்தியரும், கடலில் இருந்து வசிஷ்டரும் வெளிப்பட்டனர். பிறப்பிலேயே கடவுள் தன்மை கொண்டு அவதரித்த அகத்தியர் 'கும்பமூர்த்தி - கும்பமுனி' என அழைக்கப்பட்டார்.

சித்தர்கள் தங்கள் தலைவரான சிவபெருமானை தம் மனதுக்குள நிலைநிறுத்தி இடைவிடாது தியானித்திருப்பார்கள். அந்த வகையில் தம்முடைய அகத்தில் (மனத்தில்) ஈசனை உணர்ந்தமையால், அகத்தீசர், அகஸ்தியர் என்ற பெயரைப் பெற்றார். தட்சிணம் என்பது தென்னிந்தியா. சிவபெருமானால் தென்பகுதிக்கு அனுப்பப்பட்டவர். எனவே தட்சிணாமூர்த்தி என்ற பெயரும் இவருக்குண்டு. பொதிகை மலையில் மேரு வழிபாடு செய்து பல யுகங்கள் வாழ்கின்றவர். அதனால் பொதிகைமுனி எனவும் போற்றப்படுகிறார்.

மேரு பூசை என்பது பஞ்ச உலோகங்களால் வார்க்கப்பட்ட

nsp

சொரூபத்துக்கு அபிஷேக ஆராதனை செய்வது. இது மனிதர்களாகிய நாம் செய்யும் மேரு பூசை. சித்தர்களுக்கு மேரு என்பது உடலில் முதுகுத்தண்டின் கீழ்ப்பகுதியில் உள்ள மூலாதாரம் என்னும் சக்தி மையத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் குண்டலினி சக்தியைக் குறிக்கும். சித்தர்கள் இந்த ஞானக் கனலை எழுப்பி, உடலின் ஆறு ஆதாரங்களைக் கடந்து ஏழாவது நிலையாகிய சக்ஸ்ராரத்தை (தலையின் உச்சிப்பகுதி) அடையச் செய்து இலய யோகத்தில் ஆழ்ந்திருப்பர். இதைத்தான் மேரு வழிபாடு என்று சித்தர்கள் கூறுவார்கள்.

**அ**கத்தியரின் வரலாற்றைப் பார்ப்பதற்கு முன்னால் அப்போதைய இந்திய நாட்டின் வரலாற்றைக் கொஞ்சம் நினைவு படுத்திப் பார்ப்போம். இமயமலை முதல் தெற்கே குமரி முனைவரை ஒரே நாடாக ஒரு குடைக்கீழ் தமிழர்களே ஆண்டு வந்த காலம் அது.

இந்திய தீபகற்பத்தில் உயரமான விந்திய மலை இருந்தது. சூரிய சந்திரர்கள்கூட அம்மலையைக் கடந்து தெற்கே போக முடியாமல் துன்பப்பட்டு, சிவபெருமானிடம் சென்று முறையிட்டார்களாம். அப்போது சிவபெருமான், கயிலாய மலையில் தமது அடியவரான அகத்தியரை அழைத்து விந்திய மலையைக் கடந்து செல்லும்படி பணித்தாராம். அகத்தியர், தன்னுடன் பல ரிஷிகளை அழைத்துக் கொண்டு விந்திய மலையைக் கடந்து தென்பகுதிக்கு வந்தார் என்பது வரலாறு.

அகத்தியரின் தென்னாட்டு விஜயத்துக்கு மற்றுமோர் புராணக் கதையும் உண்டு. சிவபெருமானுக்கும், உமையம்மைக்கும் கயிலாயத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணக் காட்சியைக் காண தேவர்களும் பூத கணங்களும் கயிலாயத்தில் வந்து குவிந்தனர். இதனால் பூமியின் பாரமும் சமநிலையும் பாதிக்கப்பட்டது. சம நிலையை நிலைநிறுத்த சிவபெருமான் அகத்தியரை தென்னாட் டுககு அனுப்பி வைத்தார் என்றும் சொல்வார்கள். இந்தக் கதைக்கு ஆதாரங்கள் இல்லை.

மனித உடல் பஞ்சபூதங்களின் ((தசை (மண்), இரத்தம் (நீர்), சூடு(நெருப்பு), மூச்சு(காற்று), மனம்(ஆகாயம்)) சேர்க்கையினால் உருவானது. அதனால் அதற்கு எடை (கனம்) உண்டு. தேவர்களும், பூத கணங்களும், சித்தர்களும் ஒளியுடம்பினர். இவர்களுக்கு எடை கிடையாது. எனவே, இவர்கள் ஒன்று கூடியதால் கயிலாயத்தில் கனம் அதிகமாகிவிட்டது என்ற செய்தி நம்பிக்கைக்குரியதாய் இல்லை.

nsp

**அ**கத்தியர் தென்னிந்தியாவில் வாசம் செய்த காலத்தை மூன்று நிலைகளில் பார்க்கலாம். முதலாவதாக விந்திய மலையைக் கடந்து வந்த அகத்தியர் 'பஞ்சவடி' என்னும் இடத்தில் ஆசிரமம் அமைத்துத் தங்கினார். 'பஞ்சவடி' என்னும் இடம் இப்போது உள்ள நாசிக் என்னும் ஊரில் இருந்து சில மைல் தொலைவில் உள்ளது. இராமாயணக் கதையில் வரும் தண்டகாரண்ய வனத்தின் வட எல்லையில் அமைந்த ஊர். வனவாசம் சென்ற இராமன், தாங்கள் போகிற வழியில் அகத்தியர் ஆசிரமம் இருப்பதை இலட்சுமணனுக்குச் சொல்வதாக ஒரு காட்சி வருகிறது.

இரண்டாவது நிலையில் அகத்தியர் 'வாதாபி' என்னும் ஊருக்கு வந்து குடில் அமைத்துத் தங்கினார். வாதாபி என்பது சாளுக்கிய அரசர்களின் தலைநகரமாகும். இப்போது பதாமி என்று அழைக்கப்படுகிறது. இங்கிருந்து மூன்று கல் தொலைவில் உள்ள மலக்குடா என்னும் பகுதியில் அகத்தியர் ஆசிரமம் அமைந்திருந்தது. இந்தப் பகுதி இப்போது மும்பை மாநிலத்தில் கலட்கி மாவட்டத்தில் உள்ளது. நாசிக்கில் இருந்து முந்நூறு கல் தொலைவில் தெற்கே உள்ளது. இங்கேதான் வாதாபி என்னும் அரக்கனை, அகத்தியர் விழுங்கி சீரணித்த வரலாறு நிகழ்ந்தது.

அகத்தியர் மூன்றாம் நிலையாக தெற்கே பொதிகை மலைக்கு விஜயம் செய்தார். இயற்கை எழில்சூழ்ந்த மலைப் பிரதேசம் இது. அருவிகளும், சுனைகளும், அரிய மூலிகைகள் பலவும் நிறைந்த பகுதி. இங்கே தங்கியபோதுதான் அகத்தியர் பாண்டிய நாட்டில் முதல் தமிழ்ச் சங்கத்தை நிறுவி அதன் தலைவராகவும் விளங்கினார்.

மனித உடலில் ஆறு ஆதார நிலைகள் அமைந்துள்ளன. அவற்றைச் சக்கரங்கள், சக்தி மையங்கள் (Energy centres) என்பார்கள்.

1. மூலாதாரம்: முதுகுத் தண்டின் அடிப்பகுதியில் உள்ளது. இதன் அட்சரம் 'ந' என்பது.

2. சுவாதிஷ்டானம்: வயிற்றுப் பகுதிக்குக் கீழ் இனக்குறியின் அருகில் உள்ளது. இதன் அட்சரம் 'ம'.

3. மணிபூரகம்: வழிற்றுப் பகுதியின் மையத்தில் இருப்பது. இதன் அட்சரம் 'சி'.

4. அநாகதம்: இதயத்தில் இருப்பது இதன் அட்சரம் 'வ'.

5. விசுத்தி: கழுத்துப் பகுதியில் அமைவது - அட்சரம் 'ய'.

6. ஆஞ்ஞை: இரு புருவங்களும் இணையும் நடுப்பகுதியில் உள்ளது. 'ஓம்' என்பது இதன் அட்சரம்.

nsp

தமிழுக்கு முதன்முதலாக 'அகத்தியம்' என்னும் இலக்ண நூலைத் தந்தது அகத்தியரே. அகத்தியரின் மாணவர்களில் ஒருவரான தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலே நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்நூல் அகத்தியத்தின் வழி இயற்றப்பட்டதாகும்.

குற்றாலத்தில் அமைந்த குற்றாலீசுவரர் ஆலயத்துக்கு ஒரு வரலாறு உண்டு. அகத்தியர் காலத்தில் இங்கே ஒரு விஷ்ணு சிலை இருந்தது. அகத்தியர் அந்த சிலையின் தலைமேல் கைவைத்து 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சாடணம் செய்தார். அந்தச் சிலை குறுகி சிவலிங்கமாக மாறியது. அதுமுதல் அது சிவாலயமானது. குற்றாலநாதர் சந்நிதிக்குப் பின்புறமாக அமைந்திருக்கும் சிதம்பரச் சக்கரத்தையும் அகத்தியரே ஸ்தாபித்ததாகச் சொல்லப்படுகிறது. சிவபெருமானின் ஐந்து சபைகளில் சித்திரச் சபையாக குற்றாலம் சிறப்புடன் விளங்குகிறது.

ஒரு சமயம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடைபெற்ற போரில் அசுரர்கள் கடலுக்கடியில் சென்று ஒளிந்துகொண்டார்களாம். தேவர்கள், அவர்களை வெளியேற்றும்படி அகத்தியரிடம் வேண்டிக் கொண்டார்களாம். அட்டமா சித்துககள் கைவரப்பெற்ற சித்தரானதால் அகத்தியர், கடல் நீர் முழுவதையும் குடித்துவிட்டு அசுரர்களை வெளிப்படுத்தினார் என்று மகாபாரதம் சொல்கிறது. கடல் குடித்த குட முனி என்ற தொடரை பெரும்புலவர் மனோன்மணியம் சுந்தரனாரும் குறிப்பிட்டுள்ளார்.

நூற்றுக்கணக்கான சுவடிகள், மருத்துவம், இரசாயனம், வானியல், மருந்துகள் தயாரிக்கும் முறைகள், மருத்துவச் சிகிச்சை முறைகள், யோகம், பூசை விதிகள், பூர்ண விதிகள் (மந்திரங்கள்) தமிழ்மொழி இலக்கணம், தாவரவியல் ஆகியன அகத்தியர் உலகத்துக்கு அளித்த பெட்டகங்கள். இவற்றில் சில புத்தக வடிவிலும், சில சுவடிகளாகவும், தஞ்சை சரசுவதி மஹால் நூலகம், சென்னை, பழனி, பாளையங்கோட்டை, சுவடியகங்கள் ஆகிய இடங்களில் கிடைக்கின்றன.

அகத்தியர் அனந்த சயனம் என்னும் இடத்தில் முக்தியடைந்ததாகக் கூறுகிறார்கள். இதுவே இப்போது திருவனந்தபுரத்தில் உள்ள புகழ்பெற்ற அனந்தபத்மநாதசுவாமி ஆலயமாக உருப்பெற்றது என்பர். அகத்தியர் சித்த புருஷர், மரணமில்லாப் பெரு வாழ்வு பெற்றவர். யுகங்கள் பல கடந்தும், பொதிகை மலைப் பகுதிகளில் இன்றும் சூக்கும நிலையில் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு 6

# மூலன் தந்த மூவாயிரம் -திருமூலர்

**அகங்காரத்தில் மூழ்கி, அறிவு மங்கிய நிலையில் வாழ்கின்ற மக்களின்பால் அன்புகொண்டு, அவர்களை வழி நடத்தவும், உய்விக்கவும் பிறவியைப் பெற்றவர்களே சித்தர்கள். இவ்வரிசையில் தோன்றியவரே திருமூலர்.**

கயிலாய மலையில் சிவபெருமானின் அருள் பெற்று வாழ்ந்து வந்த ரிஷிகளுள் ஒருவர் சுந்தரானந்தர். அவர் தமது நண்பரான அகத்தியரைச் சந்திப்பதற்காக தென் திசை நோக்கிப் பயணம் மேற்கொண்டார். வழியில் கேதர்நாத், பசுபதிநாத் (நேபாளம்), காசி, காஞ்சி ஆகிய தலங்களில் உறைகின்ற சிவ பெருமானை வணங்கி விட்டு, காவிரி ஆற்றங்கரையில் உள்ள சாத்தனூரை அடைந்தார்.

அந்த ஊரை ஒட்டிய பகுதியில் பசுக்களும், கன்றுகளும், எருதுகளும் கூட்டமாய் நின்று வருத்தத்துடன் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தன. அவற்றின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. அக்கூட்டத்தின் நடுவில் அவற்றை மேய்ப்பவனான, மூலன் என்னும் இடையர் குலத்தவன் இறந்து கிடந்தான். வருத்தமானாலும், சந்தோஷமானாலும், சிறிதும் சலனமில்லாத சித்தரான சுந்தரானந்தர் அந்தக் காட்சியைக் கண்டு மனம் நெகிழ்ந்து, பசுக்களின் மீது மிகுந்த இரக்கம் கொண்டார்.

சுந்தரானந்தர் அஷ்டசித்துக்கள் கைவரப் பெற்றவராதலால் பரகாயப் பிரவேசம் செய்தார். தன் உடலை அருகில் இருந்த மரப்பொந்து ஒன்றில் மறைத்து வைத்துவிட்டார். தன்னுடைய தூல சரீரத்தை விட்டு வெளியேறி மூலனின் உடலில் பிரவேசித்தார். இதனைக் கூடு விட்டு கூடு பாய்கிற சித்து என்பார்கள். உயிர் பெற்று

nsp

எழுந்த மூலனைக் கண்டவுடன் பசுக்கள் மகிழ்ச்சியடைந்தன. அவனை நாவால் நக்கிக் கொடுத்தும், ஒலியெழுப்பியும் சந்தோஷத்துடன் ஆரவாரித்தன.

மூலன் உடலிலிருந்த சுந்தரானந்தர் மாலையில் அவற்றை கிராமத் துக்கு ஓட்டிச் சென்று கொட்டிலில் அடைத்தார். மூலனின் மனைவி அவரை மூலன் என்று நினைத்து வீட்டுக்கு வரும்படி அழைத் தாள். அவளை விட்டு ஒதுங்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தார் சுந்தரானந்தர்.

மரப்பொந்தில் தான் மறைத்து வைத்திருந்த தன் உடலில் மீண்டும் புகுவதற்காக அங்கு சென்றார். ஆனால், அங்கே தன் உடலை அவரால் காணமுடியவில்லை. உண்மை நிலையை அறிவதற்காக சுந்தரானந்தர் தியானத்தில் அமர்ந்தார். சிவபெருமானே, தன் உடலை மறைத்துவிட்டார் என்பதையும், இடையனான மூலனின் உடலில் தங்கி வாழ்வியல் நெறிகளை உலகத்துக்குத் தான் எடுத்துக் கூற வேண்டுமென்பதும் சிவபெருமானின் கட்டளை என்பதை உணர்ந்துகொண்டார். மூலனின் உடலிலேயேத் தங்கி அன்று முதல் திருமூலர் என்று அழைக்கப்பட்டார். பின்னர் திருவாவடுதுறை என்னும் ஊரினை அடைந்து அங்கு ஒரு அரச மரத்தடியில் யோக நிஷ்டையில் அமர்ந்து, ஓர் ஆண்டுக்கு நான்கு வரிகள் கொண்ட ஒரு பாடலாக, மூவாயிரம் ஆண்டுகளுக்கு, மூவாயிரம் பாடல்களைத் தந்தார். இம்மூவாயிரம் பாடல்களின் தொகுப்பே 'திருமந்திரம்' என வழங்கப்பட்டது.

வேறு ஒரு வரலாறும் உண்டு. திருமூலர் ஆகாய மார்க்கமாக தென் திசை நோக்கி வந்து கொண்டிருக்கும்போது, வீரசேனன் என்னும் குறுநில மன்னர் இறந்துவிட்டதைக் கண்டார். இளம் பருவத்தில் அகால மரணமடைந்த அம்மன்னனின் உடலைப் பார்த்து, அந்நாட்டு மக்கள் துயரம் தாளாமல் அழுது கொண்டிந்தனர். அந்த மக்கள் மீது இரக்கம் கொண்ட திருமூலர், அம்மன்னனின் உடலில் பரகாயப் பிரவேசம் செய்தார். பின்னர், பலகாலம் திருமூல வீரசேனன் என்ற பெயரில் மன்னனாக வாழ்ந்து, நாட்டை மிக நல்ல முறையில் ஆட்சி செய்தார். எனினும் அவருடைய மனம், அமைதி அடையவில்லை. ஒருநாள் இரவு அரண்மனையை விட்டுப் புறப்பட்டார்.

சதுரகிரி மலைச் சாரலோரம் அவர் நடந்து வந்துகொண்டிருந்த போது, அங்குள்ள அருவிக் கரையில் ஓர் அந்தணன் அசை யாமல் சிலைபோல் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். அருகில்

nsp

சென்று பார்த்தபோது, அவன் அப்போதுதான் இறந்துபோனது தெரியவந்தது. அவனுடைய உடல் சூடாக இருந்தது. அரசனுடைய உருவத்தை இனித் தொடர முடியாது என்று முடிவு செய்த, திருமூலர், உடனே தன் அரச சரீரத்தை விட்டு அகன்று அந்தணனுடைய உடலுக்குள் புகுந்தார். பின்னர் சதுரகிரி மலையின் மிக அடர்ந்த வனப்பகுதியில் கடும் தவம் மேற்கொண்டார்.

யோக ஞான மார்க்கங்களைத் தம் சீடர்களுக்கு உபதேசித்தார். அவை திருமூலர் பெயராலேயே வழங்கப்படுகின்றன. இது சதுரகிரித்தல புராணத்தில் இருக்கும் திருமூலரின் வரலாறு ஆகும்.

திருமூலருக்கு சீடர்கள் பலருண்டு. திருமூலர் பரம்பரை என்று ஒன்றுண்டு. அவர்களுள் காலாங்கிநாதர், கஞ்சமலைச் சித்தர், கருவூரார் ஆகியோர் முக்கியமானவர்கள்.

திருமந்திரம் சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. ஆனால், மற்ற திருமுறைகளைப் போல, திருமந்திரப் பாடல்கள் உணர்ச்சிவசப்பட்டு, பக்திப் பெருக்கால் மனத்தை உருக்கி, பரவசமடையச் செய்யும் பாடல்கள் அல்ல.

மனிதர்கள் வாழ்வில் பின்பற்ற வேண்டிய நன்னெறிகள், பண்புகள், யோகம், ஞானம், மந்திரம், தந்திரம், எந்திரம், வைத்தியம் ஆகியவற்றைக் குறித்த மிக நுட்பமான செய்திகளைக் கொண்டவை. திருமந்திரப் பாடல்களின் சந்தநயமும் இனிமையும்,

சித்தர்கள், அஷ்டாங்க யோகத்தின் கடைசி நிலையான சமாதியின் இறுதியில் தங்கள் உருவத்தை லிங்க வடிவமாக்கி, சூட்சுமமாக நிலை பெற்று இருப்பார்கள் என்பது உண்மை. இதுதான் சித்தர் சமாதி. இவ்வகையான சமாதிகளை இந்தியா முழுமையிலும், குறிப்பாகத் தென் தமிழ்நாட்டில் விசேஷமாகக் காணலாம். இந்த சிவலிங்கங்களின் மேல் பிற்காலத்தில் கோயில்கள் கட்டப்பட்டு, சுயம்புலிங்கம் என அறிவிக்கப்பட்டு அவை புகழ் பெற்றன.

திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் ஆலயம் இப்படித்தான் உருவானது. முன் காலத்தில் அடர்ந்த மூங்கில் காடாக இருந்த பகுதி அது. மூங்கில் மரங்களை வெட்டியபோது, அரிவாள் பட்டு, ஓரிடத்தில் இரத்தம் கசிந்தது. தோண்டிப் பார்க்கையில் அங்கே ஒரு சிவலிங்கம் இருந்தது. அந்த சிவலிங்கத்தின் மேல், பிற்காலத்தில் கட்டப்பட்டு, சிவபெருமானின் தாமிர சபையாக புகழ்பெற்றது நெல்லையப்பர் ஆலயம். இன்றும் மூங்கில் மரமே கோயிலின் தலவிருட்சம்.

nsp

கருத்தாழமும் படிக்கப் படிக்கத் திகட்டாதவை. திருவாவடுதுறையில் ஞானநிஷ்டையில் இருந்து, திருமூலர் முக்தியடைந்தார் என்று சொல்லப்படுகிறது.

திருமந்திரத்தில் சிதம்பரத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அதனால் திருமூலர் சிதம்பரத்தில் இருந்தார் என்றும் நம்பப்படுகிறது. சிதம்பரத்தில் திருக்கோயிலில் ஸ்ரீமூலன் சன்னிதி என்று ஒரு சன்னிதியுண்டு. இது திருமூலர் லிங்க வடிவாய் அமர்ந்துள்ள இடமென்றும் கூறுவார்கள். இந்த லிங்க வடிவம் சுயம்புவாகத் தோன்றியது என்று கூறப்படுகிறது. பிற்காலத்தில், திருமூலர் லிங்க வடிவமாய் எழுந்தருளிய இடம் என்பது மறைக்கப்பட்டு, சிவபெருமான் சுயம்புவாக வெளிப்பட்ட இடம் என்ற செய்தி நிலைத்துவிட்டது.

திருமூலரின் வழித் தோன்றலும் அவரது சீடர்களில் பிரதான இடம் பெறுபவருமான கரூவூர்ச் சித்தர் அமைத்தது சிதம்பரம் திருக்கோயிலாகும். இக்கோயிலைப் பற்றி ஒரு தனி ஆராய்ச்சியே செய்யலாம். எம்பெருமானின் கனகசபையல்வா? அவ்வளவு இரகசியங்களும், நுட்பங்களும் அக்கோயிலில் உள்ளன.

சித்தர்கள் கூறிய மனித உடல் தத்துவத்தை அடிப்படையாக வைத்து தில்லை திருக்கோயில் அமைந்துள்ளது. இது மிகவும் வியப்புக்குரிய விஷயம். மனிதன் ஒரு நாளைக்கு சராசரியாக 21600 தடவை சுவாசிக்கிறான். கனகசபையின் மேல் 21000 தங்க ஓடுகள் வைக்கப்பட்டுள்ளன. மனித உடலில் 72000 நாடிகள் உள்ளன. தங்க ஓடுகளை இணைப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ள ஆணிகளின் எண்ணிக்கை 72000. கனகசபையின் முன்னால் உள்ள ஐந்து படிகளும் பஞ்சபூதங்களைக் குறிப்பவை. அங்கே அமைந்துள்ள 96 வெள்ளிப் பல கணிகள், மனிதனுடைய 96 உடல் தத்துவங்களின் அடையாளமாகும்.

மனித உடலில் இதயம் இடது பக்கமாக இருப்பதுபோல நடராஜர் சந்நிதி சற்று இடதுபுறமாக அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள ஐந்து சபைகளும், மனித உடலின் ஐந்து போர்வைகளாக, பிராணமய கோசம், ஆனந்தமயகோசம், விஞ்ஞானமயகோசம், மனோமயகோசம், அன்னமயகோசம் என்றே அமைந்துள்ளன. சித்தர்களால் உருவாக்கம் பெற்றதே கனகசபை என்பது மறுக்க முடியாத உண்மை. இன்னும் தில்லை திருக்கோயிலின் நுட்பங்கள் ஆராய்ச்சிக்கு உரியன.

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு 7

# சீனத்துச் சித்தர் போகர்!

'போகம்' என்னும் சொல்லுக்கு உடல் சார்ந்த, ஆன்மா சார்ந்த பேரின்பம் என்று அர்த்தம். சித்தர்களுக்கு, மூலாதார சக்தி மையத்திலிருந்து குண்டலினி சக்தியானது வெளிப்பட்டு, சகஸ்ரதளத்தை அடையும்போது அனுபவிக்கப்படுகின்ற பரவச நிலை - போகம் என்று சொல்லப்படுகின்றது.

இமயமலையைச் சார்ந்த பகுதியில் ஐந்து முக்கியமான சிவால யங்கள் உள்ளன. அமர்நாத் (சிவன்-உமையம்மைக்கு கிரியை யோகத்தைப் போதித்த இடம்) கேதார்நாத், பத்ரிநாத் (இந்தியா) கைலாஷ்நாத் (திபெத், சீனா) பசுபதிநாத் (நேபாளம்) ஆகியவை. இந்த ஐந்து சிவாலயங்களிலும் போகர் யோகநிஷ்டையில் இருந்துள்ளார்.

போகர், திருமூலர் வரிசையில் வைத்து வணங்கக்கூடிய தலைமைச் சித்தர். போகரின் வரலாற்றை மூன்று நிலைகளில் பார்க்கலாம். முதலாவதாக தமிழ்நாட்டில் அவர் வாழ்ந்த நிலை, இரண்டாவதாக சீனாவுக்குச் சென்று யோக மார்க்கத்தைப் போதித்த நிலை. மூன்றாவதாக தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்து பழநியில் சமாதி நிலை எய்தியமை.

புனித நகரமான காசியில், காளங்கிநாதர் என்றொரு சித்தர் வாழ்நது வந்தார். இவருடைய சீடர்களுள் முதலாவதாக விளங்கியவரே போகர். காளங்கிநாதர், போகருக்கு அறிவியல், காயகல்ப முறைகள், இரசவாதம் ஆகியவற்றைப் போதித்துவிட்டு தனிமையில் சமாதி நிலைக்குச் சென்றுவிட்டார்.

சமிக்ஞையின்றி, மனத்தினால் தம் கருத்தைப் பிறருக்கு அறிவிக்

கும் (Telepathy) முறையில் போகரைச் சீனாவுக்குச் சென்று, யோக மார்க்க போதனைகளைப் பரப்புமாறு காளங்கிநாதர் பணித்தாராம். குருவின் ஆணையை சிரமேற்கொண்ட போகர், சீனாவுக்குப் பயணப்பட்டார்.

சீனாவில் தம்முடைய போதிக்கும் பணியை எளிதாக மேற் கொள்ள, இறந்துபோன சீனர் ஒருவரது உடலில் பரகாயப்பிரவேசம் செய்தார். தன்னுடைய பெயரை போ - யாங் என்று வைத்துக் கொண்டார். 'யாங்' என்பது சக்தி என்ற அர்த்தத்தைக் குறிக்கும் சொல்லாகும். பின்னர் சீனாவில் நீண்ட நெடுங்காலம் சீனராகவே வாழ்ந்தார்.

அங்கு அவருக்கு பல சீடர்கள் இருந்தனர். குண்டலினி கிரியையும், யோக மார்க்கங்களையும் சீடர்களுக்குப் போதித்தார். தம்முடைய குருநாதர் தமக்கு இட்ட பணியை முடித்துக் கொண்டு தமது சீடர் 'யு' என்பவருடன் இந்தியாவுக்குத் திரும்பினார். இந்த 'யு' என்பவரே புலிப்பாணினி சித்தர் என்ற இந்தியப் பெயர் கொண்டவர்.

**த**மது சீடர்களுள் சிறந்த மூன்று பேரையும், தம்முடைய நாயையும் அழைத்துக் கொண்டு இந்தியாவுக்குத் திரும்பினார். வரும் வழியில், இமயமலையின் கொடிய குளிரும் நெடிய பயணமும் அவர்களை வருத்தின. போகர், தான் வைத்திருந்த காயகல்ப குளிகையை நாய்க்குக் கொடுத்தார். அதை விழுங்கியவுடன் நாய் சுருண்டு விழுந்தது. பின்னர் தன் சீடர்களுள் ஒருவனுக்குக் கொடுத்தார். அவனும் மயங்கி விழுந்தான். பிறகு, மற்ற இரண்டு சீடர்களுக்கும் கொடுத்தார். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுக்குப் பயம் ஏற்பட்டது. எனவே குளிகையை விழுங்காமல் மறைத்து விட்டனர். மீதி இருந்த குளிகையை போகர் விழுங்கினார். உடனே பிரக்ஞையில்லாமல் கீழே விழுந்தார்.

சீடர்கள் இருவரும் தம் குருநாதர் இறந்துவிட்டார் என்று நினைத்து மனம் வருந்தினார்கள். பின்னர் மனதைத் தேற்றிக் கொண்டு அவரை அடக்கம் செய்ய குழி தோண்டினார்கள். அந்த வேலையை முடித்து விட்டுத் திரும்பிப் பார்த்தால், உடல்கள் அங்கே இல்லை. போகரும், அவரது உண்மையுள்ள சீடனும், நாயும் வெகுதூரத்தில் போய்க் கொண்டிந்தனர்.

காய கல்பக் குளிகையின் வேகம் தாங்காது மூர்ச்சையாகி விழுந்தனர். பின்னர் அக்குளிகை உடலில் வேலை செய்ய

nsp

இறைவனை அடைய அன்பும், பக்தியும், யோக மார்க்கமும் சிறந்த உபாயங்களாகச் சித்தர்களால் கருதப்பட்டன. ஆங்காங்கே சித்தர்கள் யோக சமாதியில் நிலைபெற்றனர். பிற்காலத்தில், அந்த இடங்கள் சக்தி மிகுந்த புகழ்பெற்ற கோயில்களாயின. சூக்கும வடிவில் இந்தக் கலியுகத்திலும் சித்தர்கள், மக்களை வழி நடத்திக் கொண்டு நிலைபெற்று இருக்கிறார்கள்!

ஆரம்பித்து தெம்பையும், உடல் உறுதியையும் ஆற்றலையும் அளித்தது. அவர்கள் எழுந்து சென்றனர். அவர்களது தேகம் வஜ்ரம் போல் கல்ப தேகமாகியது. கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டாமல் போன மாதிரி இந்த அற்புதமான வாய்ப்பை இழந்துவிட்ட சீடர்கள் வருந்தினர். இவ்வாறு சீனாவிலிருந்து மீண்டும் தமிழ்நாடு வந்து சேர்ந்தார் போகர்.

தமிழ்நாடு வந்து சேர்ந்ததும் கலியுகம் தொடங்குவதற்கு முன், சித்தர்கள் கூட்டமொன்றை நிறுவினார் போகர். கொங்கணவர், கருவூரார், நந்தீஸ்வரர், கமலமுனி, மச்சமுனி ஆகியோர் அவரது சீடர்களாயினர். போகர், அவர்களுக்கு காயகல்ப யோக முறைகளைக் கற்பித்தார். வரப்போவது கலியுகம்; இருண்ட காலம். எனவே மனித குலத்தை ஆன்மிகப் பாதையில் எப்படி முன்னேற்றுவது என்று எண்ணினார்.

அன்பும், இறைவன் மீது கொள்ளும் பக்தியும், இறைவனை அடைய யோக மார்க்கமும் சிறந்த உபாயங்களாகச் சித்தர்களால் கருதப்பட்டன. ஆங்காங்கே

இலங்கையில் உள்ள கதிர்காமம் என்னும் இடத்துக்குப் போகர் சென்றார். அங்கு 1008 இதழ்கள் கொண்ட கமலச் சக்கரத்தை (எந்திரம்) நிர்மாணித்தார். அந்த எந்திரத்தின் மேல் ஸ்தாபிக்கப்பட்டதுதான் கதிர்காம முருகன் ஆலயம்.

போகர், ஏழு லட்சத்துக்கு மேல் பாடல்களை எழுதியுள்ளதாகத் தெரிகிறது. பின்னர் அவை தொகுக்கப்பட்டு போகர் - சப்த காண்டம், போகர் - ஏழாயிரம் என வழங்கப்பட்டது. இந்தத் தொகுப்பில் காயகல்ப யோக முறைகள், தீட்சைவிதி, கல்பசித்தி, காயசித்தி, யோகசித்தி, இரசவாத முறைகள், பாஷாணங்கள், உபரசங்கள், கற்ப மூலிகைகள், தம் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் இவை அனைத்தையும் போகர் சொல்லியிருக்கிறார். இந்நூல் மிக அரிய பொக்கிஷம்!

nsp

சித்தர்கள் யோக சமாதியில் நிலைபெற்றனர். பிற்காலத்தில், அந்த இடங்கள் சக்தி மிகுந்த புகழ்பெற்ற கோயில்களாயின. சூக்கும வடிவில் இந்தக் கலியுகத்திலும் சித்தர்கள், மக்களை வழி நடத்திக் கொண்டு நிலைபெற்று இருக்கிறார்கள்.

போகர், பின்னர் பழநி என்று தற்போது பெயர் பெற்றுள்ள தலத்துக்கு வந்தார். அங்கே உள்ள முருகன் சிலை போகரால் நிறுவப்பட்டது. பழநியில் முருகனுக்கு செய்யப்படும் அபிஷேகங்கள், பஞ்சாமிர்த அபிஷேகம் உள்பட அனைத்தும் போகர் வகுத்த நியமப்படியே நடத்தப்படுகின்றன. கலியுகம் முழுவதும் நிலைத்து நிற்கக்கூடிய தன்மை கொண்டது பழநி முருகன் சிலை.

**கா**யகல்ப குளிகையை உண்டதால் தம்முடைய சீன சரீரத்தை உருமாற்றி போகர், பன்னிரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. பழநியில், முருகன் சிலையை நிர்மாணித்துவிட்டு அதற்குரிய பூசை நியமங்களையும் வகுத்து அந்த முறைகளைத் தமது சீடரான புலிப்பாணி சித்தருக்குப்

**நீ**ர் சுருங்கும் தன்மை கொண்ட கிரானைட் கருங்கல் போல பொருளோ அல்லது, உலோகக் கலவை கொண்டோ சிலை செய்யப்பட்டிருந்தால், தினமும் செய்யப்படும் அபிஷேக ஆராதனைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் விரிசல் ஏற்பட்டிருக்கும் அல்லது கரைந்து போயிருக்கும. போகர், ஒன்பது பாஷாணங்களைக் கூட்டி அதன் கலவையைக் கொண்டு பழநியாண்டவரின் சிலையை ஸ்தாபித்தார்.

'பாஷாணம்' என்பது முறை தவறாமல் செய்யப்படும் ஒரு கூட்டுப் பொருள். அவ்வாறு செய்யப்பட்ட ஒன்பது கூட்டுப் பொருள்களின் கட்டு என்பது பாறையை விட உறுதியாக இருக்கும். காற்று, நீர், வெப்பம், வேதிப் பொருட்கள், இவற்றால் எந்தவித விளைவும் பாஷாணக் கட்டுக்கு ஏற்படாது.

பழநியாண்டவர் சிலை தயாரிப்பில் என்னென்ன கூட்டுப் பொருள்கள் சேர்க்கப்பட்டன என்று விஞ்ஞானிகள் ஆராய்வதற்கு முயன்றனர்.

அறிவியல் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து விட்டபோதும் பழநியாண்டவர் சிலை தயாரிப்பில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள நவ பாஷாணக் கூட்டு மட்டும் யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. போகருக்கு மட்டுமே தெரிந்த புதிர் அது.

nsp

போதித்தார். பின்னர் புலிப் பாணி சித்தரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, போகர் சதுரகிரி, சிவகிரி ஆகிய மலைப் பகுதிகளில் தவம் மேற்கொண்டார்.

இறுதியாக பழநிக்குத் திரும்பிய போகர் அங்கே சொரூப சமாதியானார். பழநியில் தம்முடைய தூல சரீரத்தை விட்டு அகன்ற போதும் தொடர்ந்து சூக்கும நிலையில் இன்றும் நிலைபெற்று இயங்கி சமுதாயத்தை வழி நடத்தி வருகிறார் என்பது உண்மை. போகரை வணங்கி, தியானிப்பவர்கள் தம் உள்ளத்தில் அருள் கிளர்ச்சி, அகத்தூண்டுதல் ஏற்படுவதை அனுபவப்பூர்வமாக உணர்கின்றார்கள்.

nsp

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

# இன்னல் தீர்த்த இடைக்காட்டுச் சித்தர்

# 8

**"மனம் என்னும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே - முக்தி வாய்த்தது என்று எண்ணேடா தாண்டவக்கோனே"**

கிராமங்களில் நடக்கும் திருவிழாக்களின் போது இந்த பாடலைப்பாடி மயிலாட்டம், ஒயிலாட்டம் முதலிய கூத்துக்களை ஆடுவார்கள். மிகவும் ஆழமான ஆன்மிகக் கருத்தைக் கொண்ட இடைக்காட்டுச் சித்தரின் பாடல் இது.

மனிதனுடைய ஐந்து புலன்களையும் ஆட்டுவிக்கும் மனம் மாடு போல அலைபாயக் கூடியது. பார்க்கிற பொருள்களெல்லாம் தனக்கு வேண்டும் என்று ஆசைப்பட்டு அவற்றின் பின்னால் செல் லும் தன்மை கொண்டது. கட்டுக்கு அடங்காது. அலையும் இந்த மனதினை அடக்கிவிட்டால், மோட்சம் பெறலாம் என்பது இடைக் காட்டுச் சித்தரின் கருத்து.

**ம**துரைக்கு அருகில் இடைக்காடு என்னும் ஊரில் பிறந்ததால் இடைக்காட்டுச் சித்தர் என்ற பெயரைப் பெற்றார் என்று கூறுவார்கள். தொண்டை நாட்டில் (காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டிவனம் ஆகிய பகுதிகள்) இடையன்மேடு, இடையன் திட்டு என்னும் கிராமங்களில் வாழ்ந்ததால் இப்பெயரைப் பெற்றார் என்று வேறு சிலர் சொல்வார்கள்.

இடைக்காட்டுச் சித்தர், இடையர் குலத்தைச் சேர்ந்தவர் என்று நம்புவதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. இவரது பாடல்களில், மாடு, பசு, பால் கறத்தல், கோனார், ஊதுகுழல் போன்ற சொற்கள் காணப்படுகின்றன. இந்தச் சொற்கள்

nsp

இடையர்களின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவை. பல இடங்களில் நாராயணக்கோன், தாண்டவக்கோன் என்ற சொற்கள் இடம்பெறுகின்றன. நாராயணக்கோன் என்பது திருமாலையும், தாண்டவக்கோன் என்பது சிவபெருமானையும் குறிக்கின்றன. திருவண்ணாமலையை அடுத்த காடுகளில்களில், ஆடுகளை மேய்க்கும் தொழில் செய்து கொண்டிருந்தார் இடைக்காடர். ஒரு நாள் ஆடுகளை மேயவிட்டு விட்டு, ஒரு மரத்தடியில் கொம்பை ஊன்றிவைத்துவிட்டு மௌனமாக உட்கார்ந்திருந்தார். அப்போது அந்த வழியாக வந்த ஒரு சித்தர், இவரைக் கண்டார். வந்தவர் சித்தரென்று அறியாத இடைக்காடர். ''சாமி! நிற்கிறீர்களே உட்காருங்கள்'' என்று தர்ப்பைப் புல் விரிப்பு செய்து அவரை அமரச் செய்தார். ஆட்டுப்பால் கறந்து கொண்டு வந்து கொடுத்து, ''ஐயனே! இந்த ஏழையிடம் இப்போது இதுதான் உள்ளது. ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றார். சித்தரின் மனம் நெகிழ்ந்தது. ஆட்டுப்பாலை வாங்கிப் பருகினார்.

ஞானப்பாலை இடைக்காடருக்கு வழங்கத் திருவுள்ளம் கொண்டார். வைத்தியம், யோகம், ஞானம், சோதிடம் ஆகியவற்றைக் கற்பித்தார். அதுவரை எழுத்தறிவில்லாமல் இருந்த இடைக்காடர், வெகுவிரைவில் யோக ஞானம் வாய்க்கப் பெற்றார். இடைக்காடர் முற்பிறவிகளில் செய்த தவப்பயனால், சித்தர்களின் அருளாசியும், அருள் கல்வியும் விரைவில் கிடைத்தன.

கற்பிக்க வேண்டிய எல்லாவற்றையும், கற்பித்து முடித்த பின்னர் சித்தர் மறைந்துவிட்டார். மனம் தெளிந்து இறைஞானம் வாய்க்கப் பெற்ற இடைக்காடர், தாம் உணர்ந்த ஞானத்தைப் பாடல்களாகப் பாடினார்.

இடைக்காட்டுச் சித்தர் சோதிடக் கலையில் மிகச் சிறந்து விளங்கினார். பஞ்சாங்கங்களில் அந்தந்த ஆண்டுக்குரிய பொதுப் பலனைக் கூறும் தனிப்பாடல் இடைக்காடாரின் பாடலாகவே கூறப்படுகிறது. உதாரணத்திற்கு ஒரு பாடலைப் பார்ப்போம்.

**வெகு தான்ய வருடம் மேதினியில் எல்லாம்**
**தரு மாறி பின் பெய்யும் தான் முன் முகில் சோர்ந்து**
**கொஞ்ச மழை பெய்யும் குலவு கழை தழைக்கும்**
**பஞ்சம் பருத்தி உப்பு பாழ்.**

வெகுதான்ய வருடத்தில் மழை தாமதமாகப் பெய்யும், உப்பு விலை ஏறும். நாட்டில் பஞ்சம் வரும்; என்று இடைக்காடர் அன்று

nsp

சொன்னது இன்று உண்மையாகிவிட்டது அல்லவா?

இடைக்காட்டுச் சித்தர் தம்முடைய சோதிய அறிவால், தாம் வாழ்ந்த காலத்தில், சில வருடங்களுக்குப் பின் நாட்டில் பஞ்சம் வரப்போகிறது என்பதை அறிந்து கூறினார். முன்னேற்பாடாகத் தமது ஆடுகளுக்கு எல்லாக் காலங்களிலும் கிடைக்கக்கூடிய எருக்க இலையை உணவாகக் கொடுத்து பழக்கி வந்தார்.

குறுவரகு என்னும் தானியத்தை, மண்ணோடு கலந்து பிசைந்து சுவர்களை எழுப்பி, குடிசை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். அவர் எதிர்பார்த்தபடியே நாட்டில் பஞ்சம் வந்தது. மக்கள் உணவும், தண்ணீரும் கிடைக்காமல் துன்பப்பட்டார்கள். நாடே பாலைவனம் போல வறட்சியுடன் இருந்தது. எருக்க இலையைச் சாப்பிட்ட ஆடுகள், உடலில் அரிப்பெடுத்து உடலை சுவர்களில் உரசின. அப்படி உராயும்போது குறுவரகு தானியங்கள் கீழே உதிர்ந்தன. அவ்வாறு உதிர்ந்த தானியங்களை மட்டும் எடுத்துக் கஞ்சி காய்ச்சி

ஒருமுறை விஷ்ணு பகவானை வழிபடுபவர்களுக்குள் தர்க்கம் ஏற்பட்டது. விஷ்ணுவின் எந்த அவதாரம் சிறந்தது? பத்து அவதாரங்களில் எந்த அவதாரத்தை வழிபட்டால் என்ன பயன் கிடைக்கும்? என்பதுதான் அவர்களுடைய சந்தேகம். அவர் களுடைய கேள்விகளுக்கு பூடகமாக 'ஏழை, இடையன், இளிச்ச வாயன்' என்று இடைக்காடர் பதில் கூறினார். வந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

***ஏழை:*** தசரதச் சக்கரவர்த்தியின் திருமகனாகப் பிறந்தும் காட்டில் ஏழையாக வாழ்நத இராமவதாரம்.

***இடையன்:*** இடையர் குலத்தில், ஆயர்பாடியில் வாழ்ந்த கிருஷ்ணாவதாரம்.

***இளிச்சவாயம்:*** தூணிலும் துரும்பிலும் இறைவன் இருக்கின்றான் என்ற உண்மையை உலகத்துக்கு நிரூபிக்க வாய் திறந்து நின்ற உக்கிரமூர்த்தியான நரசிம்ம அவதாரம் என்பதே சித்தரின் பதிலுக்கான அர்த்தம்.

சித்தர்களுக்கு, எல்லா அவதாரமும், எல்லாத் திருவுருவங்களும் உணர்த்தும் பரம்பொருள் ஒன்றுதான். எனினும் மக்களின் அறிவுத் திறனுக்கு ஏற்றபடி, அவரவர்களின் பக்குவ நிலைக்குத் தகுந்தபடி, எளியமுறையில் உபதேசம் செய்வதுதான் அவர்களுடைய சிறப்பு அம்சம்.

nsp

உண்டு வாழ்ந்து வந்தார் இடைக்காடர். பஞ்சத்தில் கஷ்டப்படாமல், எப்போதும் போல இடைக்காடர், தம் ஆடுகளுடன் வாழ்ந்து வந்தார்.

இதனைப் பார்க்க நவக்கிரகங்களும் இடைக்காடரின் குடி சைக்கு விஜயம் செய்தார்கள். அவர் மிக மகிழ்ச்சியுடன் கிரகங்களை வரவேற்று தானியக் கஞ்சியும், ஆட்டுப்பாலும் கொடுத்து உபசரித்தார். எருக்க இலைச் சத்து கலந்த பால் ஆதலால் அதைப் பருகியவுடன் கிரகங்களுக்கு மயக்கம் ஏற்பட்டது. மயங்கி இருந்த நிலையில் கிரகங்களைப் பார்த்த இடைக்காடர், அவை எந்த அமைப்பில் இருந்தால் மழை பெய்யுமோ, அந்த அமைப்பில் அவற்றை மாற்றி வைத்துவிட்டார்.

வானம் இருண்டது. மேகக்கூட்டங்கள் மழையைப் பொழிந்தன. நவக்கிரக நாயகர்கள் கண் விழித்துப் பார்த்தார்கள். நாட்டில் வறட்சி யைப் போக்கிய இடைக்காடரைப் பாராட்டி, அவருக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்துச் சென்றார்கள். சித்தரின் புகழ் நாடெங்கும் பரவியது.

இடைக்காட்டுச் சித்தர் போகரின் மாணவர் என்றும், ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இவருக்கு ஞான நெறியினை உபதேசித் தவர் போகரே என்பதும் நமக்குத் தெரிய வருகிற செய்திகளாகும். குரு நாதராகிய போகர், தாம் சமாதி கொள்ளப்போகுமுன்னர், இடைக்காடரைத் திருவண்ணாமலைக்குச் செல்லுமாறு கட்டளை யிட்டாராம். திருவண்ணாமலையில் பல ஆண்டுகள் தவம் செய்து அங்கேயே சமாதி நிலை அடைந்து, இன்றும் அழியாப் புகழுடன் நிலை பெற்றிருக்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

# 9

# ஆட்டிப்படைத்த அற்புதர்!

'ஆடு பாம்பே! தெளிந்து ஆடு பாம்பே - சிவன்
சீர் பாதம் கண்டு தெளிந்து ஆடு பாம்பே..'

என்று பாம்பை ஆட அழைக்கிறது பாம்பாட்டிச் சித்தரின் பாடல் ஒன்று. இந்தப் பாடல பாம்பாட்டிகள் முதல், மேடைக் கச்சேரிகள் செய்யும் சங்கீத வித்வான்கள் வரை பிரசித்தமான பாடல். மகுடி, புல்லாங்குழல், வீணை ஆகிய இசைக்கருவிகளில் இசைக்கப்படும் பாடல். 'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. விஷப் பாம்புகளைப் பிடித்து அவற்றைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, ஆடவைக்கும் பாம்பாட்டிச் சித்தரின் புதுமொழிதான் மேலே சொல்லப்பட்ட பாடல்.

பாம்பாட்டிச் சித்தரின் வரலாற்றைப் பார்க்கும்போது அவருடைய நிஜப் பெயர் என்னவென்று தெரியவில்லை. இவர், பதினான்கு அல்லது பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்திருக்கலாம் என்று கருத்து நிலவி வருகிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு அதிகம் தெரிந்த சித்தர்களில் இவரும் ஒருவர். இவருடைய பாடல்களைப் படிக்கும் போது, பாம்பைப் பிடித்து பழக்கும் தொழிலில். (அதாவது ஒரு பாம்பாட்டியாக) அவர் இருந்திருப்பாரோ, அந்தத் தொழிலே அவருடைய பெயராக நிலைத்து விட்டதோ என்ற எண்ணம் தோன்றுகிறது, இந்தக் கருத்துக்கு சித்தரின் பாடல்களில் சான்றுகள் பல காணப்படுகின்றன.

நல்லப் பாம்பிடம் நச்சுப்பை உண்டு. பாம்பு வளைக்குள் குடியிருக்கும்; மரப்பொந்து, மண்புற்றுகள் ஆகியவற்றில்

nsp

வாழும். இந்த இடங்களுக்கு நுழைவாசல் குறுகலாக இருக்கும். நுழையும்போது தலையை முன் வைத்துக் கொண்டு உடலை அப்படியே உள்ளே இழுத்துக் கொள்ளும். தன் உடம்பை வட்டமாக சுற்றிக் கொள்ளும் இயல்பும் பாம்புக்கு உண்டு. பாம்பின் கண்ணுக்கு மிக அருகிலேயே செவி உள்ளது. அதனால்தான் கட்செவி - கண் + செவி என்று சொல்லுவார்கள்.

பாம்பின் செவி நுட்பமாக விரைவாகக் கேட்கும் தன்மை உடையது. ஒரு சிறு அதிர்வுகூட பாம்புக்குக் கேட்கும். யாராவது சத்தமாக ஒரு விஷயம் பேசினால், 'உஷ்! மெதுவாகப் பேசு, யாருக்காவது பாம்புச் செவி இருக்கப் போகிறது' என்று சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா! பாம்பு மந்திரத்துக்குக் கட்டுப்படக்கூடியது. பாம்பின் இத்தனைக் குணங்களையும் பாம்பாட்டிச் சித்தர், தம் பாடல்களில் எடுத்துக் காட்டியிருக்கிறார் என்றால் அவர் பாம்புகளுடன் நன்கு பழகியவராகத்தானே இருக்க வேண்டும்?

**பா**ம்பினைத் தென்னிந்தியாவில் 'நாகவழிபாடு' என்ற பெயரில் தெய்வமாக வணங்குகின்றார்கள். கோயில்களில், அரச மரத்தடியில், பாம்பு உருவம் செதுக்கப்பட்ட நடுகற்களை நாம் காணலாம். வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் பாம்புப் புற்றுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு, பால் நைவேத்யம் செய்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

பாம்பாட்டிச் சித்தர் எவ்வளவு பெரிய பாம்பானாலும் சரி, எவ்வளவு கொடிய விஷம் கொண்டிருந்தாலும் சரி பாம்பை எளிதாகப் பிடித்து விடுவார். தம்முடைய சக்தியால் அவற்றின் விஷத்தைக் கக்க வைத்து, சாதாரண தண்ணீர்ப் பாம்பு போல ஆக்கிவிடுவார். பாம்பு விஷத்தை முறிக்கக்கூடிய மூலிகைகளையெல்லாம் அவர் தெரிந்து வைத்திருந்தார். இவர் வாழ்ந்த மருதமலையில், விஷவைத்திய ஆராய்ச்சிக்கூடம் நடத்தினார் என்றும் சொல்லப்படுகிறது.

ஒருநாள், மலைமேல் ஒரு பெரிய நவரத்னப் பாம்பைக் கண்டு, அதைப் பிடிப்பதற்காகச் சென்றார். அந்தப் பாம்பு, தன்னுடைய புற்றுக்குள் சென்று மறைந்தது. அந்தப் புற்றுக்கு அருகில் ஒரு முனிவர், யோக நிஷ்டையில் அமர்ந்திருப்பதை பாம்பாட்டிச் சித்தர் பார்த்தார். அந்த முனிவர் 'சட்டை முனி நாயனார்' என்னும் பெயர் கொண்ட சித்தர் ஆவார். சட்டைமுனியார், பாம்பாட்டிச் சித்தனை அழைத்து, அவருக்கு ஞான உபதேசம் செய்தார்.

காடுகளுக்குச் சென்று பாம்புகளைப் பிடித்து அவற்றைப் பழக்கி

nsp

வந்த பாம்பாட்டியார், சித்தரிடம் ஞானம் பெற்று சித்தம் தெளிந்து பாம்பாட்டிச் சித்தர் என்ற பெயருடன் தவம் மேற்கொள்ளச் சென்று விட்டார்.

**பா**ம்பாட்டிச் சித்தர் பாடல்களில் இருந்து பாம்பைப் பற்றிய பல புராண வரலாற்றுச் செய்திகள் நமக்குத் தெரிய வருகின்றன. நல்ல பாம்பு சிவபெருமானின் திருச்சடைக் கற்றைகளின் மேல் இருக்கிறது. செவிகளிலே குண்டலமாக அணி செய்கிறது. சிவனின் அங்கமெல்லாம் வாசம் செய்யும் நற்பேறு பெற்றது. உமையம்மையின் கைவிரலில் மோதிரமாக விளங்குகிறது.

பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலுக்குப் படுக்கை யாகவும், தலைக்கு மேல் விளங்கும் குடையாகவும் இருக்கிறது.

**த**மிழகத்தில் கொங்கு நாட்டில், மருதமலையில் இவர் நெடுங்காலம் தவர் செய்திருப்பதாகத் தெரிகிறது. மருதமலையில் முருகப் பெருமான் சந்நிதிக்குப் பின்புறமாக சுமார் 50 படிக்கட்டுகள் கீழே இறங்கினால், பாம்பாட்டிச் சித்தர் குகை உள்ளது. இங்கேதான் பாம்பாட்டிச் சித்தர், சமாதி அடைந்ததாகச் சொல்கிறார்கள்.

இந்தப் பாம்பாட்டிச் சித்தர் குகையின் உள்ளே குறுகிய வளைபோன்ற பாதை உள்ளது. இந்தப் பாதை மலைமேல் முருகன் சந்நிதி வரை மலையின் ஊடே செல்கிறது என்றும், பாம்பாட்டிச் சித்தர் இன்றும் பாம்பு வடிவத்தில் மருதமலையில் வாழ்ந்துவருவதாகவும், தினமும் இந்த குறுகிய வளையிற் சென்று முருகனை வணங்குவதாகவும் நம்பப்படுகிறது.

தென் தமிழ்நாட்டில் கோவில்பட்டிக்கு அருகில், சங்கரன் கோவில் உள்ளது. இந்தத் தலத்தில் பாம்புப் புற்று மண் பல நோய்களைத் தீர்க்கும் மருந்தாகவும், அந்தக் கோயில் பிரசாதமாகவும் வழங்கப்படுகிறது. சங்கரன்கோவிலிலிருந்து புளியங்குடி என்னும் ஊருக்குச் செல்லும் வழியில், சித்தர் சமாதி ஒன்று உள்ளது.

சமாதியிருக்கும் இடத்தில் சரளைக் கற்கள் பரப்பப்பட்டு இரண்டு சிவலிங்கங்கள் அருகருகே உள்ளன. இவற்றில் ஒன்று பாம்பாட்டிச் சித்தர் சமாதி என்றும், மற்றொன்று அவருடைய சீடரின் சமாதி என்றும் சொல்கிறார்கள். இந்த இடத்தில் முனிவர்கள் வாழ்ந்து வருகின்றனர். போகர், தம்முடைய ஜனன சாகரம் என்னும் நூலில் பாம்பாட்டிச் சித்தர் துவாரகையில் சமாதி கொண்டிருப்பதாகக் கூறுகிறார்.

nsp

ராகு, கேதுவாக விளங்கி இந்த உலகத்துக்கு ஒளி தரும் முதற் பொருட்களான, சூரிய சந்திரர்களையே சில நேரங்களில் மறைத்து விடுகிறது. சோதிடக் கலையில், ராகு கேதுக்கள் இருக்கும் இடம், மனிதனின் வாழ்க்கையையே திசைதிருப்பக்கூடும் என்று நம்பப் படுகிறது.

**பா**ம்பாட்டிச் சித்தர் பயன்படுத்திய 'பாம்பு' என்னும் சொல் நாகப்பாம்பினைக் குறிக்காது. மனித உடலின் முக்கிய ஆதாரமான மூலாதாரச் சக்கரத்துக்குக் கீழ், பாம்பு வடிவில் சுருண்டு அமையப் பெற்ற குண்டலினி என்ற ஆற்றலைக் குறிக்கும். குண்டலம் என்றால் வளைந்து சுருண்ட அமைப்புடையது என்று பொருள்.

சித்தர்கள் தம்முடைய யோகப் பயிற்சியினால் குண்டலினி ஆற்றலை கிளர்ந்தெழச் செய்து, மேலே எழுப்பி சகஸ்ராரத்தை அடையச் செய்வர். எனவே பாம்பு என்னும் சொல் தத்துவார்த்தமாக குண்டலினி ஆற்றலைக் குறிக்கும் என்றும் சொல்வார்கள். சித்தர்களின் அளவிடமுடியாத வல்லமைகளையெல்லாம், பாம் பாட்டிச் சித்தர் தலைநிமிர்ந்து பேசுகிறார். மூன்று உலகங்களையும், சூரிய, சந்திரர்களையும், மற்ற கோள்களையும் ஆட்டிப் படைக்கும் வல்லமை சித்தர்களுக்கு உண்டு என்கிறது அவரது பாடல்.

**சி**த்தர்களுக்கு சாதி சமய பேதங்கள் கிடையாது. பாம்பாட்டிச் சித்தர் வாழ்ந்த காலத்தில் சமுதாயத்தில் சாதி சமயப் பிரிவுகள், மூடப்பழக்க வழக்கங்கள் அதிகமாக இருந்திருக்க வேண்டும். தம்முடைய பாடல்களில் இவற்றையெல்லாம் சிறிது கோபத்துடனே கண்டிக்கிறார்.

மனித சமூக ஒற்றுமையிலும், உண்மையான பக்தியுணர்வையும் மனிதன் உணர வேண்டும் என்பதிலும் சித்தருக்கு இருக்கும் ஆர்வம் தெளிவாகவே வெளிப்படுகிறது. துறவு என்பது உலகத்தைத் துறப்பதல்ல; உலகத்துப் பொருட்களின் மீது கொள்ளும் பற்றினை, ஆசையைத் துறப்பதே உண்மையான துறவறம். சித்தர்கள் துறவிகள்; எனினும் மனிதகுல மேம்பாட்டிற்குப் பாடுபட்டவர்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

# சிவமே சித்தமென்ற சிவவாக்கியர்!

10

பச்சரிசி, பாசிப் பருப்பு, பாகுவெல்லம், பசுநெய், கற்கண்டு, ஏலக்காய் சேர்த்துப் பக்குவமாகச் சமைக்கப்பட்ட சர்க்கரைப் பொங்கல், பார்க்கும்போதே நாக்கில் நீர் ஊறுகிறது. அந்தப் பொங்கல் எவ்வளவு நேரம் வெள்ளிப் பாத்திரத்தில் இருந்தாலும், அதன் சுவையை அந்தப் பாத்திரம் உணர முடியாது. அதுபோல நம்முடைய மனதிற்குள்ளேயே இருக்கும் இறைவனை, நாம் உணராது ஒவ்வொரு கோயிலாகத் தேடிச் சென்று அலைவதால் என்ன பயன்?

"நட்ட கல்லைச் தெய்வம் என்று நாலு புஷ்பம் சாத்தியே
சுற்றி வந்து முணமுணென்று சொல்லு மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?"

இருபதாம் நூற்றாண்டின் பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியாரின் சித்தனையைப் போலவே பளிச்சிடுகிறது சித்தர் சிவ வாக்கியரின் இந்தக் கேள்வி! இந்தப் பாடலைப் படித்தவுடன் சித்தர்கள், கோயில் வழிபாட்டுக்கு எதிரானவர்களோ? என்ற சந்தேகம் வரக்கூடும். அப்படியென்றால் ஆலயங்கள்தோறும் சித்தர்கள், அடக்கமாகி உள்ளதன் சூட்சுமம் என்ன? என்ற எண்ணம் உங்கள் மனத்தில் தோன்றக்கூடும்.

சித்தர்கள், உருவ வழிபாட்டை எதிர்க்கவில்லை. மனத்தில் பக்தி உணர்வு இல்லாமல் வெறும் சமயச் சடங்குகளையும், சாஸ்திர சம்பிரதாயங்களையும் மட்டும் செய்தால் அது முழுமை பெற்ற கடவுள் வழிபாடு ஆகாது என்பதே சித்தர்களின் இறைமைக்

nsp

கொள்கை.

சிவவாக்கியரைப் பற்றி செவி வழிக் கதை ஒன்று உண்டு. அந்தணர் குலத்தில் பிறந்த சிவவாக்கியர், காசி யாத்திரை புறப்பட்டுச் சென்றார். காசி நகரத்தில் ஒரு ஞானியைச் சந்தித்து, ''ஐயா! நான் உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும்'' என்றார். அந்த ஞானி ஒன்றும் பேசவில்லை. இரண்டு நாழி நிறைய மண்ணும், படுசுரைக்காய் ஒன்றையும் சிவவாக்கியர் கையில் கொடுத்துவிட்டு, ''எந்தப் பெண் உனக்கு இதை வைத்துச் சுவையாக சமைத்துத் தருகிறாளோ அவளை நீ மணந்து கொள்'' என்று கூறினார். தான் திருமணம் செய்துகொள்ள ஒரு வினாடி சலனம் கொண்டதை இந்த ஞானி எப்படித் தெரிந்து கொண்டார் என்று வியந்தபடியே சிவ வாக்கியர், அவற்றைப் பெற்றுக் கொண்டு திரும்பினார்.

வழியெங்கிலும் ஊர்கள்தோறும் நான் பார்த்த பெண்களிடம், ''இதனை வைத்து சமைக்க முடியுமா?'' என்று கேட்டார். இவருக்கு சித்தப்பிரமையோ என்று அனைவரும் இவரைவிட்டு ஒதுங்கினர்; இகழ்ந்து பேசினர்.

கடைசியாக ஓர் ஊருக்குச் சென்ற சிவவாக்கியர், அந்த ஊரில் தாழ்ந்த குலத்தவர்கள் வாழும் பகுதிக்குச் சென்றார். அங்கே ஓர் இளம்பெண் மட்டும் இருந்தாள். அவளிடமும் சிவவாக்கியர் இதே கேள்வியைக் கேட்க, அந்தப் பெண் பதிலேதும் பேசாமல் அவற்றை வாங்கிக்கொண்டு போய் அடுப்பிலிட்டுச் சமைத்தாள். என்ன ஆச்சரியம்! மணல் அரிசியாகியது. படுசுரைக்காய் சுவை மிகுந்த கறியாகியது.

சிவவாக்கியர், அதனைச் சாப்பிட்டு விட்டுப் பின்னர் அந்தப் பெண்ணையே மணந்துகொண்டார். சிறிதுகாலம் அவர்களுடனேயே தங்கியிருந்து, அவர்களுடைய குலத்தொழிலான மரம் வெட்டும் தொழிலையும் செய்து வந்தார்.

ஒருநாள் காட்டில் மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது, வெட்டிய ஒரு மரத்திலிருந்து பொன் மணிகள் உதிர்ந்தன. அவற்றைப் பார்த்தபோதும், சிவவாக்கியரின் மனத்தில் அவை தனக்குச் சொந்தம் என்ற எண்ணம் வரவில்லை. கோடாலியை அப்படியே கீழே போட்டுவிட்டு மௌனத்தில் ஆழ்ந்தார். பின்னர் தன் நிலை உணர்ந்து அவ்விடம் விட்டு அகன்றார்.

சித்தம் தெளிந்த சித்தராயிருந்தும் ஒரு பூர்வ ஜென்ம இச்சையினால் இந்த வினை நிகழ்ந்தது போலும் என்ற கருத்து இந்தக் கதையின் வழி தெரியவருகிறது.

nsp

சிவவாக்கியர் பல ஆண்டுகள் தவம் செய்து, யோக மார்க்கத்தில் ஈடுபட்டு அஷ்டமா சித்திகளும் கைவரப்பெற்றார். சித்தர்களில் அதிகமான எண்ணிக்கையில் பாடல்களைப் பாடியவர் இவரே. மூடப் பழக்கவழக்கங்கள், சாதி மத வேறுபாடு ஆகியவற்றை எதிர்த்து இவர் பாடிய பாடல்கள் ஏராளம். சாதி மதப் பிரிவுகளை அழகான ஓர் எடுத்துக்காட்டால் அருமையாக விளக்குகிறார்.

தங்கத்தைக் கொண்டு விதவிதமான ஆபரணங்கள் செய்கிறீர்கள். தோடு, தொங்கட்டான் என்று காதில் அணிந்து கொள்பவை பல. கழுத்தில், இடையில், விரல்களில் என்று பல்வேறு அமைப்புடைய ஆபரணங்களை அணிந்து கொள்கிறீர்கள். இவை எல்லாமே அமைப்பில், வடிவத்தில் வேறுபட்டவையே தவிர, இவை அனைத்துக்கும் உட்பொருள் தங்கம் ஒன்றேதான்.

இதைப் போலத்தான் மனிதனும், நிறத்திலும், உருவத்திலும், பழக்கவழக்கத்திலும், நாகரீகத்திலும், குணத்திலும் மனிதர்கள் வேறுபடலாம். ஆனால் மனித உடல் என்பது பஞ்சபூதங்களால் ஆனது. எலும்பு நரம்பு, குருதி, தசை ஆகியவற்றால் ஒரே மாதிரியாகத்தான் உருவானது. இப்படி இருக்கையில் சாதிமதப்

சிவவாக்கியர் சித்தரின் இயற்பெரும் வாழ்க்கை வரலாறும் முழுமையான ஆதாரங்களுடன் நமக்குக் கிடைக்கவில்லை. இவர் வேதியர் குலத்தில் பிறந்தார். பிறக்கும்போது 'சிவ சிவ' என்று சொல்லிக் கொண்டு பிறந்ததால், சிவவாக்கியர் என்ற பெயரைப் பெற்றார் என்கிறது ஒரு தகவல். இவர் பிறக்கும்போது சிவாய என்னும் வாக்கியம் ஒலித்ததால், சிவவாக்கியர் என்று அழைக்கப்பட்டார் என்பது மற்றொரு செய்தி. இவர் இயற்றிய நூலுக்கு, சிவவாக்கியம் என்று பெயர். அந்த நூலின் பெயரை ஒட்டியே சிவவாக்கியர் என்ற பெயர் நிலைத்துவிட்டது என்ற விளக்கமும் கிடைக்கிறது. இவருடைய பாடல்களில் ஏறக்குறைய ஐம்பது இடங்களில் 'சிவாய' என்னும் சொல் காணப்படுகிறது.

இராமநாமத்தையும் திருமாலையும் பல இடங்களில் இவர் பாடியுள்ளார். திருமாலும் சிவனும் ஒன்றுதான் என்னும் கருத்து இவர் பாடல்களிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. வைணவ சமயத்து பன்னிரெண்டு ஆழ்வார்களில் திருமழிசையாழ்வார் இவரே என்பது ஒரு கருத்து. வைணவராயிருந்து, பின்னர் இறைவன் ஒருவனே என்று உணர்ந்து சித்தராகி, சிவவாக்கியர் என்ற பெயரினைப் பெற்றார் என்னும் வரலாறும் நமக்குக் கிடைக்கிறது.

nsp

பிரிவுகள் எங்கேயிருந்து வந்தன? எப்படி வந்தன? மனிதனால் உருவாக்கப்பட்டதே இந்த சாதிப் பிரிவுகள். இதைச் சமுதாயத்தில் இருந்து அகற்றிவிட வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்ட சித்தர்களில் சிவவாக்கியர், தலைமையிடம் பெறுகிறார். புரட்சி கரமான கருத்துக்களைப் பாடியதால் சிவவாக்கியர் பாடல்களில் சொற்கள் கடுமையாக, சமுதாயத்தின் மீது விழுந்த சாட்டையடிகளாக வெளிப்பட்டன.

சிவபெருமானின் நமசிவாய, சிவாயநம என்னும் திருவைந்தெழுந்து மந்திரத்தையும், அதனை உச்சாடனம் செய்யும் முறைகளையும், அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளையும், தெளிவாகத் தம் பாடல்களில் விளக்குகிறார் சிவவாக்கியர். நமசி வாய என்னும் ஐந்தெழுத்து மந்திரம் ஒன்றே அந்த நமசிவாயத்தை நமக்கு உணர்த்தும் என்பது சிவவாக்கியச் சித்தரின் கருத்து.

முன்காலத்தில், காவிரி ஆற்றின் தெற்குக் கரையோரம் திருக்குடமூக்கு என்னும் பெயர் கொண்ட ஓர் ஊர் இருந்தது. குடம் என்றால் கலசம் என்று அர்த்தம். காவிரி ஆற்றில், அமுதம் நிரம்பிய கலசம் ஒன்று மிதந்து வந்ததாம். சிவபெருமான், வேடர் வடிவத்தில் அங்கு தோன்றி தன்னுடைய அம்பினால், கலசத்தில் ஒரு துளையிட்டாராம்.

nsp

அமுதம் அந்தத் துளை வழியே எல்லா இடங்களிலும் பரவியதாம். அப்போது வீசிய பலத்த காற்றினால் கலசத்தில் இருந்த மாவிலை, தர்ப்பை, வில்வ இலைகள், தேங்காய், கலசத்தைச் சுற்றிய முப்புரி நூல் ஆகியவை பல்வேறு இடங்களில் விழுந்தன. அவை விழுந்த இடங்கள் ஒவ்வொன்றிலும் சிவலிங்கங்கள் தோன்றின.

பிற்காலத்தில் அங்கே சிவன்கோயில்கள் உருவாயின. இந்த திருக்குடமூக்கு என்னும் தலமே தற்போது கும்பகோணம் என்ற பெயர் பெறுகிறது. நம் நாட்டில் உள்ள 64 சக்திபீட ஸ்தலங்களில் கும்பகோணமும் ஒன்று. இங்குதான் சிவவாக்கியர் சித்தர் சமாதி நிலையை எய்தியாகச் சொல்லப்படுகிறது.

nsp

# கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா!

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

11

சிவமும், சக்தியும் ஒன்றுதான். சிவம் என்பது நிலைபேறுடைய ஞான ஆற்றல். சக்தி என்பது இயங்கு ஆற்றல். சிவத்திடமிருந்து சக்தியையோ, சக்தியிடமிருந்து சிவத்தையோ தனியாகப் பிரிக்க முடியாது. சக்தியில்லையெனில் சிவமில்லை. சிவமில்லையெனில் சக்தியில்லை. இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்ததுதான் உமையொரு பாகமாக அமைந்த அர்த்தநாரீஸ்வரர் திருக்கோலம். சிவபெருமான் தமது உடலில் இடப்பாகத்தை சக்திக்கு அளித்ததாக எழுந்த புராணக் கதைகளும் இதன் அடிப்படையில் எழுந்தவையே.

சித்தர் பாடல்களில் சக்தியே, தாயே, அன்னையே, அம்மா ஆகிய சொற்களைக் காணலாம். சித்தர்களில் பெரும்பான்மையினர் சக்திவழிபாட்டை மேற்கொண்டவர்கள். அந்த வரிசையில் தோன்றியவர்களுள் கொங்கணச் சித்தரும் ஒருவர். இப்போது உள்ள கேரள மாநிலத்தின் வடக்குப் பகுதியும், கர்நாடக மாநிலத்தின் சில பகுதிகளும் மஹாராஷ்டிரா மாநிலத்தின் மேற்குக் கரையோரப் பகுதிகளும் (கோவா) இணைந்த இடம் கொங்கண நாடு என்று முற்காலத்தில் வழங்கப்பட்டது.

கொங்கண நாட்டில் வாழ்ந்த மக்கள், கொங்கணியர்கள் எனப்பட்டனர். அந்தப் பகுதியிலிருந்து வந்தமையால் சித்தருக்கு, கொங்கணச் சித்தர் என்ற பெயரே நிலைத்துவிட்டது. தமிழ்நாட்டில், கோயம்புத்தூரை ஒட்டிய பகுதி கொங்கு நாடு ஆகும். இந்தப் பகுதியிலிருந்து வந்ததால் கொங்கணச் சித்தர் என்று பெயர் பெற்றார் என்பதும் சிலருடைய கருத்து. காங்கேயம் என்ற ஊருக்கு ஆறு கிலோ மீட்டர் தொலைவில், கொங்கணகிரி என்னும்

nsp

மலை உள்ளது. இந்த மலையில் கொங்கணச் சித்தர் சில காலம் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

சிறு வயதிலிருந்தே சித்தருக்கு, அம்பிகை வழிபாட்டின் பேரில் விருப்பமும், ஆர்வமும் மிகுதியாக இருந்தன. உலக வாழ்க்கையின் மீது பற்றில்லாமல், தாமரை இலையின் மேல் நீர்த்துளி போல, பட்டும் படாமலும் வாழ்ந்து வந்தார். அகத்தியரிடமும், போகரிடமும் சென்று தீட்சை பெறவேண்டும் என்ற எண்ணம் கொங்கணச் சித்தரின் மனத்தில் வெகுகாலமாக இருந்தது.

சித்தர்களில் பெரும்பாலோர், தங்களுடைய குருநாதரிடம் தீட்சை பெற்ற பின்னர், அகத்தியரிடம் சில காலம் குருகுலவாசம் செய்து ஞான உபதேசம் வேண்டி நிற்பார்கள். அந்த வகையில் கொங்கண சித்தரும், அம்பிகையைப் பிரார்த்தித்தார். அன்னையின் திருவருளால் இவருக்கு மகா சித்தரான போகரைச் சந்திக்கும் நற்பேறு கிடைத்தது.

போகரை வணங்கி, ''ஐயனே! அடியேன் அம்பிகையை வழிபாடு செய்ய விரும்புகிறேன். அந்த வழிமுறைகளை எனக்கு உபதேசம் செய்யுங்கள்'' என வேண்டினார். போகரும் இவருக்கு ஞான உபதேசம் செய்தார். ஞானக் கல்வி பெற்ற பின்னர், உள்ளம் உருகி, போகரை, ''என்னை ஈன்ற தந்தையே'' என்று கொங்கணச் சித்தர் அழைக்கிறார்.

சித்தர்களுக்கு வாழ்க்கை என்பது, தமது குருவிடம் ஞான தீட்சை பெற்ற பின்னர் தொடங்கும் காலம் ஆகும். அதுவரை இந்த உலகத்தில் இருந்ததை ஒரு வாழ்க்கையாகவே அவர்கள் நினைப்பதில்லை. ஞான உபதேசத்திற்குப் பின்னர், தவம் செய்யத் தொடங்கும்போதுதான், இந்த உலகத்தில் தாம் பிறந்ததன் நோக்கம் நிறைவேறுகிறது என்பது அவர்களுடைய கருத்து.

போகரிடம் குருகுலவாசம் முடிந்த பின்னர், அம்பிகையின் திருவருளைப் பெறவேண்டி கொங்கணவர் தவம் மேற்கொண்டார். தமது தவத்தை முடித்துக் கொண்டு பயணம் செய்தபோது திருமழிசை ஆழ்வாரைச் சந்தித்தார். அவருடன் சிலகாலம் தங்கியிருந்த பின், மீண்டும் தவம் செய்யத் தலைப்பட்டார்.

ஒரு மலைப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது விசாலமான பாறை ஒன்று தென்பட்டது. அந்த இடம் கொங்கணச் சித்தரின் மனத்தில், அமைதியை உண்டாக்கியது. அந்த இடத்திலேயே அமர்ந்து அம்பிகையைத் தியானம் செய்தார்.

nsp

அப்போது அவருக்கு முழவு, மத்தளங்கள், சங்கு, பேரிகை, யாழ் ஆகிய இசைக்கருவிகளில் ஓசைகள் தொடர்ந்து கேட்டன. அந்த இடம் முழுவதும் தெய்விக மணம் கமழ்ந்தது. கொங்கணச் சித்தரின் மனக் கண்களில் ஒரு சமாதி தெரிந்தது. உடனே சமாதியில் உள்ளேயிருந்து ஒளிமயமாக ஜோதி ஸ்வரூபமாக கௌதம மகரிஷி காட்சி அருளினார்.

அம்பிகையின் அருளால்தான் கௌதம மகரிஷியைத் தரிசிக்கும்

முனிவர்கள், தவசிகள் நிஷ்டையில் இருக்கும்போது நாம் அவர்களுடைய தவம் கடையும்படி எந்தச் செயலும் செய்யக்கூடாது. எந்தச் சத்தமும் எழுப்பக்கூடாது. தவம் என்பது எளிதான செயல் அல்ல. அப்படி நம்முடைய அஜாக்கிரதையால் அவர்களுடைய தவம் கலைந்தால், நாம் அவர்களுடைய கோபத்துக்கும், சாபத் துக்கும் ஆளாக நேரிடும்.

கொங்கணச் சித்தர் ஒருநாள், ஆழ்ந்த நிஷ்டையில் அவர் இருந்தபோது வானத்தில் பறந்து சென்று கொண்டிருந்த கொக்கு ஒன்று எச்சமிட்டது. அது கொங்கணர் மீது விழுந்துவிட, நிஷ்டை கலைந்து அவர் கண் விழித்துப் பார்த்தார்.

பலகாலம் தவத்தில் இருப்பவர்களுடைய சக்தி, பல மடங்காகப் பெருகியிருக்கும். அவர்கள் கண் விழிக்கும்போது அவர்களுடைய பார்வைக்கும் சக்தியுண்டு. அப்படிக் கண் விழித்த கொங்கணச் சித் தரின் முதல் பார்வையில் பட்ட கொக்கு எரிந்து சாம்பலானது.

நெடுங்காலம் எந்தவித சலனமுமின்றி தவம் செய்து, இடையில் கலைந்ததால் பஞ்சபூதங்களின் இயக்கத்தால், ஐம்புலன்களும் செயல்பட ஆரம்பித்தன. கொங்கணருக்குப் பசி ஏற்பட்டது. ஒரு வீட்டைத் தேடிச் சென்று உணவு வேண்டும் என்று கேட்டார். அந்த இல்லத்தரசி, தன்னுடைய கணவருக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். பதிசேவையை முடித்துவிட்டு உணவு எடுத்துக் கொண்டு வர சிறிது காலதாமதம் ஆகிவிட்டது.

கொங்கணர், அந்தப் பெண்ணை விழித்துப் பார்த்தார். அதைப் பார்த்த அந்தப் பெண், ‘‘கொக்கென்று நினைத்தாயோ! கொங் கணவா!’’ என்றாள். சித்தர் திடுக்கிட்டார். கொக்குக்கு நேர்ந்தது இந்தப் பெண்ணுக்கு எப்படித் தெரியும் என்று நினைத்தார். அந்தப் பெண் பதிவிரதை என்பதைத் தனது ஞானதிருஷ்டியில் உணர்ந்து கொண்டார். இந்தப் பெண்தான் வாசுகி அம்மையார் என்பதும், அவ ருடைய கணவர்தான் திருவள்ளுவர் என்பதும் சிலருடைய கருத்து.

nsp

பாக்கியம் தனக்குக் கிடைத்தது என்றுணர்ந்த சித்தர், அவரை வணங்கி தனக்கு அருளாசி வழங்குமாறு வேண்டினார். மகரிஷி, கொங்கணச் சித்தருக்கு உபதேசம் செய்துவிட்டு, சமாதி கொள்ளுவதற்குத் தகுதியான இடம் ஒன்றையும் காட்டிவிட்டு மறைந்துவிட்டார்.

கௌதமர் காட்டிய இடத்தில், அஷ்டாங்க யோகத்தின் கடைசி நிலையாகிய சமாதி நிலையை எய்துவதற்கு, தவம் செய்யத் தொடங்கினார் கொங்கணச் சித்தர். மழை பெய்து அந்த இடம் பள்ளமாகி, மேலே பாறைகள் தாமாக மூடிக் கொண்டன. ஆண்டு கள் பல கழிந்தன. இவை எதையும் உணரும் நிலையில் கொங்கணச் சித்தர் இல்லை. பல காலம் சமாதி நிலையில் இருந்துவிட்டு, பின்னர் வெளியே வந்தார். மீண்டும் மலைப் பகுதிகளிலும், காடுகளிலும் தவம் மேற்கொண்டார்.

கொங்கணச் சித்தர் மனத்தில் ஏதோ ஒருகுறை இருப்பது போலவும், யோக சமாதி சித்திக்கவில்லையே என்ற ஏக்கமும் இருந்தது. தமது குருவாகிய போகரை மனத்தில் நினைத்து தியானம் செய்தார். போகர், கொங்கணச் சித்தரின் எதிரில் தோன்றினார். தம்முடைய மனக்குறையைத் தமது குருநாதரிடம் சொல்லித் தம்மை வழிநடத்தும்படி வேண்டினார்.

போகர், கொங்கணரை, திருமாளிகைத் தேவரைச் சந்தித்து தீட்சை பெறும்படி கூறினார். குருவின் ஆணைப்படி திருமாளிகைத் தேவரை சந்தித்து, தனக்கு தீட்சை அருளுமாறு வேண்டினார். அவரும் பல இரகசிய சாதனை முறைகள், கல்ப முறைகள், யோக தீட்சை ஆகியவற்றை சித்தருக்குக் கற்பித்தார்.

கொங்கணச் சித்தர், இரசவாதம், காயகல்ப முறைகள், மருத்துவம் ஆகிய துறைகளில் பல அரிய செய்திகளைத் தமது நூல்களில் எழுதியுள்ளார். நூற்றுக்கணக்கான சீடர்களுக்கு சித்திகளை அடைய வழிகாட்டினார். இறுதியாக திருவேங்கட மலையை அடைந்து, தவம் மேற்கொண்டார்.

நாள்தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் ஒருசில வினாடிகள் மட்டுமே காணக்கூடிய திருவேங்கடநாதனின் திருவுருவச் சிலைக்குக்கீழே, கொங்கணர் இன்றும் யோகசமாதியில் நிலைபெற்று மக்களுக்கு அருள் ஆற்றலை வழங்கிக் கொண்டிருக்கிறார். திருப்பதி சென்று திரும்பி வந்தால் வாழ்வில் ஏற்படும் திருப்பத்திற்கு, திருவேங்கடமுடையானின் திருவருளும் காரணம்; கொங்கணச் சித்தரின் அருளாசியும் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

# தேடி வந்த தேரையர்!

# 12

மகா சித்தரான அகத்தியர், சித்த வைத்தியத்துக்கான மருந்துகளைத் தயாரிக்கும் வேலைகளிலும், தமக்கு உதவி செய்யவும், தகுதியான சீடன் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தார். ஒருநாள், அந்தணர் குலத்தில் பிறந்த ஊமைச் சிறுவன் ஒருவன், அகத்தியரை நாடி வந்தான். அவரும் அந்தச் சிறுவனைத் தன் சீடனாக ஏற்றுக்கொண்டு தன்னுடனேயே இருக்கச் செய்தார்.

அகத்தியருக்கு சிஷ்யராக இருப்பது என்பது எவ்வளவு பெரும்பேறு! எத்தனையோ பிறவிகளில் தவம் செய்தவர்களுக்குத்தான் இந்த வாய்ப்பு கிடைக்கும். அந்த ஊமைச் சிறுவன் முந்தைய பிறவியில் இராமதேவர், என்ற பெயருடன் சித்தராக வாழ்ந்தவர்தான்.

அகத்தியரிடம் குருகுலவாசம் வேண்டி அது நிறைவேறாமலேயே அந்தப் பிறவி முடிந்துவிட, மறுபிறவியில் அகத்தியரைத் தேடி வந்தவர் அவர். தன்னுடைய சிஷ்யனை அகத்தியருக்கு மிகவும் பிடித்துப் போனது. சிஷ்யனால் பேச முடியவில்லையே தவிர மற்ற விஷயங்களிலெல்லாம் கெட்டிக்காரனாக விளங்கியதால் போகும் இடங்களுக்கெல்லாம் தன்னுடன் அழைத்துச் சென்றார். வைத்திய முறைகள், மருந்துகள் தயாரிக்கும் முறைகளைக் கற்பித்தார்.

சிஷ்யன் தேரையரானது மிக சுவாரஸ்யமான கதை.

அகத்தியர், ஒருமுறை, முனிவர் ஒருவரது தீராத தலைவலியைக் குணப்படுத்துவதற்கு அவரைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். பரிசோதனையில் சிறிய உயிரினம் ஒன்று, முனிவரது தலைக்குள் இருப்பது தெரியவந்தது. இந்தக் காலத்தில் இருப்பது போல

nsp

அப்போது ஸ்கேன் கருவிகளெல்லாம் கிடையாது. தலைக்குள் இருந்த அந்த உயிரினத்தை அகற்றினால்தான் முனிவரது நோய் நீங்கும். அகத்தியர், சிறிதும் தாமதிக்காது மூளை அறுவை சிகிச்சை செய்யத் தயாரானார்.

சிகிச்சை தொடங்கப்பட்டு முனிவரின் கபாலம் திறக்கப்பட்டது. அங்கே, மூளைப் பகுதியில் ஒரு சிறிய தேரை அமர்ந்திருந்தது. தேரையை வெளியே எடுத்தாக வேண்டும். இடுக்கியைக் கொண்டு தேரையைப் பிடித்தால், தேரை நகர்ந்து போய்விடும். மூளையில் நரம்புகளில் இடுக்கி பட்டுவிட்டால் மேலும் சிக்கலாகி முனிவரின் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கூடவேயிருந்து பார்த்துக் கொண்டிருந்த சிஷ்யன், ஒரு காரியம் செய்தான். ஒரு தாம்பாளம் எடுத்து அதில் நிறைய தண்ணீர் நிரப்பி, தேரைக்கு அருகில் கொண்டு வந்து வைத்தான். தண்ணீரைப் பார்த்த தேரை உடனே தாம்பாளத்தில் குதித்தது. முனிவரின் மண்டை ஓடு மூடப்பட்டது.

அகத்தியரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஓர் ஊமைப் பையன் எவ்வளவு சாமர்த்தியமாக, விரைவாகச் செயல்பட்டுவிட்டான் என்று நினைத்தார். முனிவரின் உயிர் காப்பாற்றப்பட்டதால் அகத்தியரின் பெயரும் வைத்தியத் துறையில் நிலைபெற்றது.

சிஷ்யரைக் கட்டித் தழுவிப் பாராட்டி, "தேரையைச் சமயோசிதமாக அகற்றி குருவையும், முனிவரையும் காப்பாற்றினாய். இன்று முதல் நீ, தேரையர் ஆவாய்" என்ற அகத்தியர், அவரது ஊமைத் தன்மையையும் போக்கி, தமக்குத் தெரிந்த வைத்திய முறைகள் அனைத்தையும் தேரையருக்குக் கற்பித்தார்.

அகத்தியரிடமிருந்து வைத்திய ஞானம் பெற்ற தேரையர், நாடெங்கிலும் சென்று தேவைப்படுவோருக்கெல்லாம் வைத்தியம் செய்து, புகழ்பெற்று விளங்கினார். சிறிது காலம் சென்றது. அகத்தியருக்கு தன் சிஷ்யன் எப்படி இருக்கிறான் என்பதைக் காண ஆவல் ஏற்பட்டது. தேரையரைத் தன்னை வந்து பார்க்கும்படி கட்டளையிட்டார். தேரையரும் வந்து குருவின் பாதங்களைப் பணிந்து வணங்கினார்.

"தேரையா! எனக்கு ஓர் அபூர்வமான மூலிகை வேண்டும். அதைத் தேடிக் கொண்டு வந்து தருவாயா?" என்றார். "கட்டளையிடுங்கள் குருவே. எதுவானாலும் கொண்டு வந்து தருகிறேன்" என்றார் தேரையர், "கண்வெடிச்சான் மூலிகை வேண்டும். கொண்டு வந்து தருவாயா?" என்றார்.

nsp

கண்வெடிச்சான் மூலிகை, பார்ப்பதற்கு கண்கள் போல அழகான இலைகளைக் கொண்டது. ஆனால், அதனைப் பறிக்கும்போது அதிலிருந்து கிளம்பும் புகை, கண்களைப் பாதித்து பார்வை இழக்கச் செய்யும். தேரையர், மனம் தளரவில்லை.

பொதிகை மலைக்காடுகளில் இந்த மூலிகையை சிரமப்பட்டு தேடினார். ஓரிடத்தில் அந்த மூலிகைச் செடியைக் கண்டார். பறித்தால் தன் பார்வை போய்விடும் அபாயம். உடனே அந்த இடத்திலேயே அமர்ந்து அம்பிகையைத் தியானம் செய்தார். 'தாயே! என் குருநாதருக்கு நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும். அருள்புரிவாய் அம்மா' என்று பிரார்த்தித்தார். சிறிது நேரத்தில் தேரையர், கண் விழித்துப் பார்த்தார். கண்வெடிச்சான் மூலிகை, ஒரு பெரிய இலைக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

அன்னையை வணங்கிவிட்டு அதனை அப்படியே எடுத்துக் கொண்டு போய் அகத்தியரிடம் சேர்ப்பித்துவிட்டார். "தேரையா,

ஒருமுறை பாண்டிய மன்னனின் அரச சபைக்கு அகத்தியர், விஜயம் செய்தார். பாண்டியன், சிறந்த சிவபக்தன். ஆனால், அவனுக்குத் தீராத உடல்குறைபாடு இருந்தது. அவன் முதுகு கூனலாக இருந்தது. இதனால் பல காலம் மனவருத்தம் கொண்ட பாண்டியன், தன்னுடைய குறையைப் போக்குமாறு அகத்தியரை வேண்டினான். அகத்தியரும் ஒப்புக்கொண்டு தன் சிஷ்யனை அனுப்பி தேவையான மூலிகைகளையெல்லாம் பறித்து வருமாறு செய்தார்.

மூலிகைகளின் சாறுகளைப் பிழிந்து எண்ணெயுடன் கலந்து, கொப்பரையில் கொதிக்க விட்டிருந்தனர். அகத்தியர், தன் சிஷ்யனிடம், 'பார்த்துக்கொள்' என்று சொல்லிவிட்டு மன்னனைப் பார்க்கச் சென்றார்.

கொப்பரையில் தைலம் கொதித்துக் கொண்டிருந்தது. அந்த இடத்தின் மேற்கூரை கொம்புகளால் வேயப்பட்டிருந்தது. தைலத்தின் நீராவி பட்டு கூரையில் இருந்த வளைந்த கொம்புகள் 'சடசட' என்ற சப்தத்துடன் நேராக நிமிர்ந்தன. இதைப் பார்த்த ஊமை சிஷ்யன், தைலம் சரியான பதத்துக்கு வந்துவிட்டது என்று அறிந்து அடுப்பிலிருந்த நெருப்பை அணைத்தான். சிறிது நேரத்தில் திரும்பி வந்த அகத்தியர், நிமிர்ந்த கொம்புகளைப் பார்த்தார். சிஷ்யனின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டி சந்தோஷப்பட்டார். பாண்டியனின் முதுகில், தைலத்தை தடவி வர நாளடைவில் கூன் நிமிர்ந்து அவனது குறையும் நீங்கியது.

nsp

மருத்துவ உலகத்துக்கு உன்னைத் தயார் செய்யவே இந்த சோதனையைத் தந்தேன். இந்த மூலிகையைத் தேடும்போது நிறைய அபூர்வமான மூலிகைகளைப் பற்றித் தெரிந்து கொண்டிருப்பாய். அவற்றின் தன்மைகளையும், பயன்களையும் குறித்து ஒரு நூல் எழுது. பிற்காலத்தில் சித்த மருத்துவ உலகத்துக்கு வழிகாட்டியாக இது விளங்கும்'' என்று கூறி ஆசிர்வதித்தார்.

குருவின் அருள் ஆணைப்படி தேரையர், நூல் எழுதத் தொடங்கினார். இவர் எழுதிய 'பதார்த்த குண சிந்தாமணி' என்னும் நூலில் தாவர வகைகளில், மரம், செடி, கொடி இவற்றின் வேர், விதை, தண்டு, பட்டை இலை, பூ, காய், கனி ஆகியவற்றின் மருத்துவக் குணங்கள் அனைத்தையும் எழுதியுள்ளார். இவற்றை எப்படி ஒன்று சேர்த்து, நோய்க்குத் தக்கபடி மருந்தாகப் பயன்படுத்துவது என்ற குறிப்புகளும் இந்நூலில் உள்ளன.

இந்த நூல் தவிர, நீர்க்குறி, தைலவர்க்க சருக்கம், மருத்துவ பாரதம், வைத்தியமாக வெண்பா, நாடிக்கொத்து, நோயணுகாவிதி, நோயின் சாரம், நோயின் கரிசல் என சித்த மருத்துவத்தை, முழுமையாக அறிந்து வெளிப்படுத்தியவர் தேரையர், என்று சொல்லலாம். நோய் அணுகா விதிகளை தேரையர் வழி நின்று பார்ப்போம்.

உண்பது இருபொழுது ஒழிய மூன்று பொழுது உண்ணோம்
உறங்குவது இரா ஒழியப் பகல் உறக்கம் செய்யோம்
பெண் கடமைத் திங்களுக்கோர் காலன்றி மருவோம்
பெரும்தாகமெடுத்திடினும் பெயர்த்து நீர் அருந்தோம்
மண் பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்
வாழை இளம் பிஞ்சு ஒழியக் கனியருந்தல் செய்வோம்
நண் பெற உண்ட பின்பு குறுநடையும் கொள்வோம்
நமனார்க்கு இங்கு ஏது கவை நாம் இருக்கும் இடத்தே...

தேரையர், நமக்காக நோயற்ற வாழ்வு பெற, செய்ய வேண்டியவற்றைப் பட்டியலிட்டுத் தந்திருக்கிறார். இவர், நெடுங்காலம் பொதிகை மலையில் தவம் செய்து அங்கேயே யோக சமாதியில் நிலைகொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

13

# மகப்பேறு அருளிய மச்சமுனி!

சித்தர்கள் யுகங்கள் பல கடந்து, தம்முடைய தேகத்தை கல்பதேகமாக மாற்றிக் கொண்டு வாழ்ந்து வருவார்கள். திரேதா யுகத்தில் அப்படி அபூர்வமாக வாழ்ந்த சித்தர்களில், மச்சரிஷியும் ஒருவர். மச்சமுனி, மச்சேந்திரர், மச்சேந்திரநாதர் என்ற பெயர் களெல்லாம் கொண்ட சித்தர் ஒருவரே, ஓர் இடத்தை விட்டு வேறு ஓர் இடத்துக்குச் செல்லும் போதும், ஒரு காலகட்டத்தைக் கடந்து வாழும் போதும் பெயர்கள்தான் வேறுபடுகின்றன. தலையில் சடைமுடியுடன், உடம்பெல்லாம் விபூதி பூசிக்கொண்டு, கையில் ஒரு பிரம்புத்தடியுடன் ஒரு சாமியார் இருந்தால், அப்பகுதியில் வாழ்கின்ற மக்கள், அவரை சடைசாமி என்று அழைப்பார்கள். ஒரு சிலர், அவரை விபூதி சாமி என்று சொல்வார்கள். சிலர், பிரம்பு சாமி என்பார்கள். இதேபோல ஊர்ப் பெயரை வைத்து, பூண்டிமகான், திருவலச் சித்தர் என்ற பெயர்களும் உண்டு.

சித்தர்களுக்கு, 'உற்றாரை யான் வேண்டேன்; ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்' என்பது கொள்கையாகும். சித்தர்களுடைய பெயர்கள் எல்லாம் அவர்களாக வைத்துக் கொள்வதில்லை. அவர்களுக்கு எந்தப் பெயரை வைத்தாலும் அதில் அக்கறை காட்டுவதுமில்லை. தூல உடம்புக்கு எந்தப் பெயர் வைத்தால் என்ன என்று இருப்பார்கள்.

மச்சமுனி, அகத்தியர் காலத்தில் வாழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஒரு சமயம், கடற்கரையோரத்தில், சிவபெருமான், உமையம்மைக்கு தாரக மந்திரத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார். உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருக்கையில் அம்மைக்கு உறக்கம்

nsp

வந்துவிட்டது. அக்கடலில் வசித்த மீன் ஒன்றின் வயிற்றில் இருந்த கருவானது, இம்மந்திரத்தை முழுமையாக உள்வாங்கிக் கொண்டது. பின் வெளியே வந்த அந்த மீன் வயிற்றுப் பிள்ளைக்கு, சிவ பெருமான், மச்சர் என்ற பெயரைக் கொடுத்தார்.

மச்சரின் உருவத்திலிருந்து, தலை மனித வடிவமும், உடல் மீனின் வடிவமும் கொண்டது என்ற குறிப்பு தமக்குக் கிடைக்கிறது. முழுவதும் மனித உருவம் என்ற கருத்தும் நிலவுகிறது. இது மச்சமுனியின் அவதார வரலாறு.

பிறக்கும்போதே சிவபெருமானின் உபதேசத்தோடு பிறந்தவர் என்பதால் மச்சமுனிக்கு தவயோகம் தானாகவே நேர்ந்தது. அவர், நீண்ட நெடுங்காலம் யோக வழியில் தவம் மேற்கொண்டார். அட்டமா சித்துக்கள் அனைத்தும் கைவரப் பெற்றார். ஊர் ஊராக சஞ்சாரம் செய்து வரும்போது, ஓர் ஊரில், இவர் உணவு வேண்டி ஒரு வீட்டின் முன் நின்றார். இவருக்கு பிச்சையிட்ட அந்த வீட்டுப் பெண் இவரை வலம் வந்து வணங்கினாள்.

அந்தப் பெண்ணின் முக வாட்டத்தைப் பார்த்த சித்தர், என்ன காரணம் என்று கேட்டார். தனக்கு வெகு காலமாக புத்திரப்பேறு வாய்க்கவில்லை என்று தன் மனக்குறையைக் கூறி, தனக்குப் புத்திரப் பேறு அருளுமாறு அந்தப் பெண் சித்தரை வேண்டினாள். மச்சமுனி, அவளுடைய நிலைக்கு இரக்கங்கொண்டு விபூதி பிர சாதம் கொடுத்து ‘‘இதனை நீ உட்கொள்’’ என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

இந்தப் பெண் விபூதியைப் பெற்றுக் கொண்டு தனது பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் நடந்தவற்றைக் கூறினாள். அவள், ‘‘இந்த முனிவர் மாய வேஷக்காரன். விபூதி கொடுத்து உன்னை மயக்கி, தன்னுடன் அழைத்துக் கொண்டு போய் விடுவான்’’ என்று கூறினாள். அந்தப் பெண் விபூதியை அடுப்பிலிருந்த நெருப்பில் போட்டுவிட்டாள். பின்பு அடுப்புச் சாம்பலை அள்ளி வீட்டின் புழக்கடையில் கொட்டி விட்டு, இந்த நிகழ்ச்சியை அறவே மறந்துபோய்விட்டாள். வருடங்கள் சில சென்றன.

**ம**ச்சமுனி மீண்டும் அவ்வழியே வந்து, தான் விபூதி கொடுத்த அந்தப் பெண் வீட்டின் வாசலில் நின்று அவளை அழைத்து, ‘‘உன் பிள்ளையை நான் பார்க்க வேண்டும், அழைத்து வா’’ என்றார். அந்தப் பெண், உண்மையை மறைக்காது நடந்தவற்றைக் கூறினாள். அந்த அடுப்புச் சாம்பல் எங்கே என்று மச்சமுனி வினவ,

nsp

தன் வீட்டுப் புழக்கடையில் உள்ள குப்பையைக் காட்டினாள்.

மச்சமுனி அந்த இடத்துக்குச் சென்று ''கோரக்கா வா'' என்று குரல் கொடுத்தார். அங்கே ஓர் அதிசயம் நடந்தது. சாம்பல் குப்பையிலிருந்து, சித்தர் விபூதி கொடுத்த காலம் முதல், பிள்ளையை அழைத்த காலம் வரை உள்ள ஆண்டுகள் நிரம்பிய வயது கொண்ட சிறுவன் ஒருவன், ''ஏன்?'' என்று பதில் குரலுடன் வெளியே வந்தான்.

அந்தச் சிறுவனை அந்தப் பெண்ணிடம் கொடுத்தார் சித்தர்.

கோரக்கர் இயற்றிய சித்த மருத்துவ நூல், 'கோரக்கர் வைப்பு'. சித்த மருத்துவக் குறிப்புகள் மட்டுமல்லாது, சித்த மருந்துச் சரக்குகள் எப்படியிருக்கும்? எங்கே கிடைக்கும்? அந்த மருந்துகள் கிடைக்கக்கூடிய மலைகள், அவற்றின் அமைப்பு, தன்மைகள், அந்த இடங்கள் எங்கு உள்ளன? அந்த இடங்களில் உள்ள மண் தன்மை, நீர்த்தன்மை, பருவநிலை மாற்றங்களால் மூலிகைகளில் ஏற்படும் மாறுதல்கள், எந்தப் பருவகாலங்களில் அவற்றைப் பறித்துப் பயன்படுத்த வேண்டும்? ஆகியவற்றைக் குறித்த எல்லா விவரங்களையும் கோரக்கர், தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். உங்களுக்காக, கோரக்கர் மலைவாகடம் என்னும் நூலிலிருந்து சில வரிகள்.

'மதுரையிலிருந்து கிழக்கே ஐந்து நாழிகை தூரம் கடந்தால் அங்கே யானையின் உருவத்தைப் போல ஒரு மலை உள்ளது. அந்த மலையில் சித்தர்கள் வசிக்கும் குகை இருக்கிறது. அந்த மலையோரம் அரை நாழிகை தூரம் கடந்தால் நரசிங்கப் பெருமாள் சன்னிதியுண்டு. அந்த சன்னிதிக்கு அருகில் ஒரு பொய்கை உண்டு. அருகிலேயே பண்டரிநாதச் சித்தரின் ஆசிரமம் இருக்கிறது. அவரைத் தரிசித்துவிட்டு மலைமேல் ஏறி கிழக்குப் பக்கமாகப் போனால் யானையின் வால் பகுதி போல மலை இருக்கும். அவ்விடம் ஒரு நாழிகை தூரம் வந்தால் அந்த இடத்தில், கருக்குவாச்சி மரம் இருக்கிறது. அந்த மரத்தின் இலை மூன்று விரல் அகலத்தில், இலையைச் சுற்றி கருக்குகளாகவும், புஷ்பம் வெண்மை நிறத்தோடும், காய் சிறியதாகவும் இருக்கும்''...

நன்றி!

இரா.குருசாமி கோனார் சன்ஸ், மதுரை.

இப்போது புரிகிறதல்லவா, கோரக்கரின் புவியியல் மற்றும் தாவரவியல் புலமை!

nsp

சிறுவனோ தான் மச்சமுனியையே குருவாகக் கொண்டு அவரைத் தொடர்ந்து வர விரும்புவதாகக் கூறினான். அவரைத் தன் சீடனாக ஏற்றுக் கொண்டார் மச்சமுனி. இருவரும் தன் பயணத்தைத் தொடர்ந்தனர்.

நீண்ட நெடுங்காலம் பாரதக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருவரும் தவம் செய்தனர். வட இந்தியாவில் வாழ்ந்த நவநாத சித்தர்களில் இவரும் ஒருவராக 'மச்சேந்திர நாதர்' என்ற பெயரில் குறிக்கப்படுகிறார். மச்சமுனி இரசவாத வித்தை, வைத்தியம், வாதநிகண்டுகள் உள்ளிட்ட பல நூல்களை இயற்றியுள்ளார். இவர் தமிழ்நாட்டில், தற்போது திருப்பரங்குன்றம் என்ற பெயர் கொண்ட தலத்தில், முக்தி அடைந்ததாக சொல்லப்படுகிறது. திருப்பரங்குன்றம், முருகப்பெருமானின் அருள் கூடிய அறுபடை வீடுகளில் ஒன்றாக விளங்கும் பெருமை பெற்றது நாம் அறிந்ததே.

மச்சமுனியைக் குருவாகக் கொண்ட கோரக்கரும் சித்திகள் பல அடைந்து சிறப்பு பெற்றவர். இவரும் வடநாட்டில் 'கோரக்க நாதர்' என்ற பெயருடன் குறிக்கப்படுகிறார். இந்தியாவில் உள்ள கோரக்பூர் என்னும் நகரப் பகுதியில் இவர் வாழ்ந்ததாகவும், இவர் பெயராலேயே அந்த நகரம் குறிக்கப்படுகிறது என்றும் ஒரு செய்தி உண்டு.

nsp

சீனா, நேபாளம் ஆகிய இடங்களில் கோரக்கர் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இலட்சுமி நரசிம்மன் என்னும் பெயர் கொண்ட மன்னன் நேபாளத்தை ஆட்சி செய்தான். மரப்பலகைகளால் கோரக்க நாதருக்கு அவன் ஒரு கோயில் கட்டியதாகவும், அக்கோயிலுக்கு கஸ்தமண்டபம் என்ற பெயர் இருந்ததாகவும், இப்பெயரே நாளடைவில் காட்மண்டு என்று மருவியதாகவும் நம்பப்படுகிறது. காட்மண்டுவில், கோரக்கர் தவக் கோலத்தில் அமர்ந்த நிலையில், ஆலயம் ஒன்று உள்ளது. தமிழ்நாட்டில், மதுரைக்கு அருகே உள்ள திருப்புவனம் என்னும் ஊரிலும் ஆதி கோரக்க சித்தருக்கு ஆலயம் உள்ளது.

கோரக்கர், நாகப்பட்டினத்துக்கு அருகே உள்ள பொய்கை நல்லூரில், சமாதி நிலை எய்தினார் என்ற செய்தி பெரும்பான்மையாக உறுதி செய்யப்படுகிறது.

nsp

*சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு*

**14**

# இரக்கமே இயல்பான இராமலிங்கர்!

**உ**யிரினங்கள் நான்கு விதங்களில் பிறக்கின்றன. முட்டையிலிருந்து வெளியே வருவன, வியர்வையிலிருந்து தோன்று வன, வேர், விதை இவற்றிலிருந்து பிறப்பன, கருப்பையிலிருந்து பிறப்பன. இந்த நான்கு விதங்களில், மனிதன் கருப்பையிலிருந்து பிறக்கிறான். ஆண் - பெண் உயிரணுக்கள் இணைந்து, பெண்ணின் கருப்பையில் கருவாக உருவாகி, கர்ப்ப காலம் முடிவடையும்போது பிறப்பது மனித இனம். இப்படி இல்லாமல் ரிஷிகளிடமிருந்து வரம் கிடைத்தவுடன் கருவாக உருப்பெற்று வளர்ந்து பிறப்பினை எய்துவது 'சம்புபக்ஷ சிருஷ்டி'

**த**மிழ் நாட்டில், நெய்வேலி என்னும் ஊருக்கு தென்மேற்குப் பகுதியில் மருதூர் என்னும் பெயர் கொண்ட சிறிய கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தில், ஒருநாள் ஒரு வீட்டின் வாசற்புறத்தில் காவி உடை தரித்த ரிஷி ஒருவர் வந்து, பிச்சை வேண்டினார். அந்த வீட்டுத் தலைவி அவரை பயபக்தியோடு வரவேற்று, வீட்டுக்குள்ளே அழைத்து அமர வைத்து உணவு கொடுத்தாள். பசியாறிய அந்த ரிஷி ''உனக்கு ஒரு மகன் பிறப்பான். அவன் இந்த உலகத்துக்கு மரணமில்லாப் பெருவாழ்வு வாழ வழிகாட்டுவான்'' என்று வரம் அருளிச் சென்றுவிட்டார். ரிஷியிடமிருந்து இந்த வரம் கிடைக்கப் பெற்றவுடன் அந்தப் பெண் கருத்தரித்தாள்.

நம் நாட்டில் பல காலமாக ஒரு வழக்கம் உண்டு. பிறந்த குழந்தையை முதன்முதலாக ஒரு கோயிலுக்கு எடுத்துச் சென்று இறைவழிபாடு செய்துவிட்டு வருவார்கள். அந்த வழக்கப்படி,

nsp

இராமலிங்கரை, அவரது பெற்றோர், சிதம்பரம் கோயிலுக்கு எடுத்துச் சென்றனர். இறைவழிபாடு முடிந்தவுடன் கற்பூர ஆரத்தி காட்டினார்கள். கோயில் கருவறையில் கற்பூர தீப ஒளி பரவியவுடன் அதனை சில வினாடிகள் பார்த்த குழந்தை, சிறிது நேரம் சிரித்ததாம்.

சாதாரணமாகக் குழந்தைகள் தூங்கும்போதோ, அல்லது விழித்திருக்கும் போதோ தானாகச் சிரித்தால், போன ஜென்மத்து மகிழ்ச்சியான அனுபவங்களின் நினைவு என்று நாம் சொல் லுவோம். ஆனால், இராமலிங்கர், கற்பூர தீப ஒளி பரவியவுடன், தனக்குள்ளே ஓர் இன்ப ஊற்றுப் பெருக்கெடுத்தது. ஒளிமயமான இறைவனைத் தமக்குள்ளே தரிசித்து அந்தப் பரவசத்தில் மூழ்கியதால் பெருகிய ஆனந்த வெள்ளத்தின் வெளிப்பாடே அந்த நிலை என்று பின்னாளில் கூறுகிறார்.

இராமலிங்கர், தமது மூன்றாவது வயதிலேயே தனது தந்தையாரை இழந்தார். குடும்பம் வருமானம் எதுவுமின்றி வறுமையில் வாடியது. அடிகளாரின் மூத்த சகோதரரான சபாபதி, குடும்பப் பொறுப்பை ஏற்றார். குடும்பம் சென்னைக்கு இடம் பெயர்ந்தது. ஆன்மிக சொற்பொழிவுகள் நடத்தியும், பள்ளிச் சிறுவர்களுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லிக் கொடுத்தும் சொற்ப வருமானம் பெற்றுக் குடும்பத்தை நடத்தி வந்தார் சபாபதி. ஐந்து வயது நிரம்பிய இராமலிங்கரை ஒரு தமிழ்ப்புலவரிடம் சேர்த்து, கல்வி கற்குமாறு செய்தார். கல்வி கற்பதில் இராமலிங்கருக்கு ஈடுபாடில்லை.

சென்னையில் கந்தக் கோட்டத்தில் உள்ள இறைவனிடம் பற்று கொண்டு தன்னுடைய, நேரத்தையெல்லாம் கோயிலிலேயே கழித்தார். பக்திப் பாடல்களை இயற்றுவதிலும், தியானம் செய்வ திலும் இச்சிறுவனுக்கு இருந்த ஆர்வத்தைப் பார்த்த அந்த ஆசிரியர், கல்வி கற்பிப்பதை நிறுத்திவிட்டார். சகோதரரான சபாபதிக்குக் கோபம் வந்துவிட்டது. சிறுவனுக்கு உணவும், உடையும் மறுக்கப் பட்டது. இராமலிங்கர் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டார்.

இராமலிங்கரின் அண்ணி, தாய் ஸ்தானத்தில் இருந்தவர். இராம லிங்கர் மீது அன்பு கொண்டு, தன் கணவனிடம் வாதாடி, தாங்கள் வசித்த வீட்டின் மேற்புறத்தில் ஒரு தனி அறையை ஒதுக்கி, அதில் அவரை அமர வைத்து பல அறிவுரைகளையும், குடும்ப சூழ்நிலையையும் விளக்கிக் கூறினார்.

அண்ணியின் உருவத்தில் தாய் அன்பினை அனுபவித்த இராமலிங்கர், கல்வி கற்க ஒப்புக் கொண்டார். அந்த அறையில்

nsp

புத்தகங்கள் குவிக்கப்பட்டன. தாளிட்ட கதவுக்குப் பின்னால் இராமலிங்கர் கற்றது ஆன்மிகக் கல்வி. விளக்கை ஏற்றி அதற்கு முன்னால் அமர்ந்து அந்த ஒளியின் ஸ்வரூபத்தில் இறைவனைத் தரிசித்து ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்தார். நாட்கள் சென்றன. இறை அனுபவத்தில் மூழ்கி பல பாடல்கள் இயற்றினார். இராமலிங்கர் மீது தொடர்ந்து இறையருள் பொழியப் பொழிய சித்திகள் பல கைவரப் பெற்றார். தமது ஒன்பதாம் வயதில் இறைவன் தன்னை ஆட்கொண்டதாகவும், தன்னுள் இறைவனை உணர்ந்ததாகவும், தமது பாடல்களில் கூறுகிறார்.

ஒருமுறை சபாபதிக்கு உடல் நலம் சரியில்லாததால் அவரால் ஆன்மிக சொற்பொழிவுக்குப் போக முடியவில்லை. அவருடைய மனைவி, ‘உங்களால் போக முடியவில்லை. தம்பியை அனுப்பி வையுங்கள்’ என்றார். ‘அவனுக்கு என்ன தெரியும் சின்னப் பையன்’ என்ற சபாபதி, கடைசியில் வேறு வழி தெரியாமல் ‘சரி போய் வரட்டும்’ என்றார்.

சிறுவனைப் பார்த்த மக்கள், ஏமாற்றத்துடன் அமர்ந்திருந்தனர். அன்று பெரிய புராணம் பற்றிய சொற்பொழிவு, மேடையில் அமர்ந்த இராமலிங்கர், பெரிய புராணத்தில் முதல் அடியான ‘உலகெல்லாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்’ என்ற அடியைத் தொடங்கினார். வார்த்தைகள் குற்றால அருவியைப் போல தொடர்ந்து விழுந்தன. தெளிந்த நீரோடையைப் போன்ற தெளிவான நடை, அருமையான

இராமலிங்க அடிகள் இந்த உலகத்துக்கு அருட்கொடையாக அளித்தவை ஐந்து:

சத்திய தருமச் சாலை,
சத்திய ஞான சபை,
சன் மார்க்க சங்கம்,
சித்தி வளாகம்,
திருஅருட்பா

முதல் நான்கும் சமுதாயத்தை இறைவன் பால் செலுத்துவதற்கு நிறுவப்பட்ட நிறுவனங்கள். திருவருட்பா வள்ளலார் தொடுத்த பாமாலை.

சத்திய தருமச் சாலை - இதன் குறிக்கோள் ஜீவ காருண்யம், பிற உயிர்களைத் தன்னுயிர் போல நினைத்து கருணை காட்டும் பண்பினை மக்களிடத்தில் போதிப்பது.

nsp

விளக்கம், அனுபவித்து உணர்ந்த பொருள்.

கூட்டம் அமைதியானது. நேரம் நள்ளிரவைக் கடந்தது. மக்கள், மந்திரத்துக்கு கட்டுப்பட்டவர்கள் போல சிலையாக உட்கார்ந்திருந்தார்கள். தொடர்ந்து இராமலிங்கரே சொற்பொழிவு ஆற்ற வேண்டும் என்பது அனைவருடைய விருப்பமாக இருந்தது. இறைவனுடைய அருள் இராமலிங்கருக்குப் பரிபூரணமாக இருப்பதை உணர்ந்த சகோதரர், தன்னுடைய தவறான நடவடிக் கைகளுக்கு மன்னிப்புக் கேட்டார்.

இராமலிங்கரின் புகழ் பரவ ஆரம்பித்தது. பல புலவர்களும், சமயத் தலைவர்களும் இராமலிங்கரிடம் தங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றார்கள். அவரை அன்புடன் அடிகளார் என்று அழைத்தனர். ஒருநாள் விளக்கில் எண்ணெய் தீர்ந்துவிட, அடிகளால் தண்ணீரை ஊற்றித் தீபத்தைத் தொடர்ந்து எரிய வைத்தார். ஒரு பிடி அன்னம் கைவசம் இருக்க, அதிலிருந்து ஓராயிரம் பேருக்கு அன்னதானம் அளித்தார் என்ற நிகழ்ச்சிகள் இவர் பெற்ற சித்திகளின் ஆற்றலை வெளிப்படுத்துகிறது. எனினும் அடிகளார் தான் பெற்ற சித்துக்களைத் தனக்காகவும் பெயர், புகழுக்காகவும் பயன்படுத்தவில்லை. இது சித்தர்களின் இயல்பு.

இராமலிங்கர் தினமும் திருவொற்றியூர் சென்று தியாகராசப் பெருமானையும், வடிவுடை நாயகித் தாயையும் தரிசித்தார். தமது 22ம் வயது முதல் சிதம்பரம் நடராசப் பெருமான் முன்

சத்திய ஞான சபை - இறைவன் அருவுருவமானவன், ஒளி வடிவானவன் என்னும் கருத்தை வலியுறுத்தி ஜோதி வழிபாட்டை அறிவுறுத்துவது.

சன்மார்க்க சங்கம் - மனிதர்களிடம் ஜாதி, மதம், இனம், மொழி, ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடுகளையெல்லாம் களைந்து உயிர்களெல்லாம் ஒன்றே என்னும் உயர்ந்த ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உணர்வை வெளிப்படுத்துவது.

சித்தி வளாகம் - உடல் அழியக்கூடியது. ஆன்மாவுக்கு அழிவு கிடையாது. மரணமில்லாப் பெருவாழ்வு என்னும் அரிய தத்துவத்தை உணர்த்துவது.

திருஅருட்பா - மேற்கண்ட ஜீவகாருண்யம், ஜோதி வழிபாடு, ஆன்ம நேய ஒருமைப்பாடு, மரணமில்லாப் பெருவாழ்வு ஆகிய அரிய தத்துவங்களின் விளக்கமாக அமையும் நூல்.

nsp

சென்று பாடல்களைப் பாடினார். தென்னிந்தியாவின் புகழ்பெற்ற கோயில்களுக்கு யாத்திரை மேற்கொண்டார். இறுதியாக கருங்குழி (நெய்வேலியிலிருந்து 10 கி.மீ.) என்னும் கிராமத்தில் ஒன்பது ஆண்டுகள் தங்கினார்.

அடிகளார் கற்பித்த வழிபாட்டு முறை சோதி வழிபாடு ஆகும். இறைவனுக்கு உருவமும், பெயரும் வைத்தால் சமுதாயத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். ஒளி என்பது எல்லா சமயத்தவர்களும் ஒப்புக் கொள்ளக் கூடியது. ஒளியை வெறுப்பவர்கள் யாரேனும் உண்டா? ஒளியின் முதற்பொருளான சூரியன் இல்லையென்றால் இவ்வுலகம் ஏது? உயிர்கள் ஏது? எனவே 'அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை' என்பது வள்ளலாரின் வாக்கானது. சமுதாயத்தில் சாதி சமயப் பிரிவினைகளை எதிர்த்து 'ஆன்ம நேய ஒருமைப்பாடு' என்னும் கருத்தை வலியுறுத்தினார் வள்ளலார்.

1874ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் நாள், வடலூரை அடுத்த மேட்டுக் குப்பம் என்னும் சிற்றூரில் தன்னுடைய அறையை தாளிட்டுக் கொண்டு சித்தியடைந்தார். ஒவ்வோர் ஆண்டும் தைப் பூசத்தன்று இந்த அறைக்கு வழிபாடு நடத்தப்படுகின்றது.

ஆன்மிக வாழ்க்கை வாழ்ந்து, சமுதாயப் பிரிவினைக்குக் காரணமான சாதி, சமயம், சடங்கு, சாத்திரம் அனைத்தும் தேவையில்லை என்றும், இறைவன் ஒருவனே, ஜோதி வழிபாடே பொதுவான வழிபாடு என்றும் நிலை நிறுத்திய இராமலிங்க அடிகளார், பத்தொன்பதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற சித்தர்.

nsp

சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு

**15**

# சீரும் சிறப்புமுடைய சித்த மருத்துவம்!

அதிகாலையில் அலாரம் அடித்தவுடன், அன்றாட வேலைகளை அவசரமாக முடித்தாள் ஆனந்தி. "அம்மா தலையை வலிக்குதும்மா" என்று சொல்லியபடி வந்த தன் மகளிடம் காபி தம்ளரை நீட்டியவள், "இந்தா இதை எடுத்துக்கொள்" என்று குரோசின் மாத்திரை ஒன்றைக் கொடுத்தாள். வீட்டு வேலைகளை முடித்துவிட்டு அலுவலகம் வந்து தன் இருக்கையில் அமர்ந்தவள், தன் முதுகுவலியையும் அடி வயிற்றுவலியையும் சமாளிக்க தானும் ஒரு குரோசினை விழுங்கினாள். இப்படி வலி நிவாரண மாத்திரைகளும், உணவு செரிமான மருந்துகளும், தற்போது அன்றாடம் நிறையப் பேருக்குத் தேவைப்படுகின்றன.

நம் உடலில் ஏற்படும் வலிகள், ஜலதோஷம், காய்ச்சல் ஆகியவை நோய்கள் அல்ல. உடலில் நோய் உள்ளது என்பதை நமக்குக் காட்டும் அடையாளங்கள், அறிகுறிகள், வலி நிவாரண மாத்திரைகளைக் கொண்டு இவற்றைத் தற்காலிகமாக நாம் அடக்கிவிடுகிறோம். இதனால் நோய் குணமாகிவிட்டது என்று அர்த்தமல்ல. நோயின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்து குணப்படுத்த வேண்டும். இந்த நோய் அறிதல் என்பதே சித்த மருத்துவத்தின் அடிப்படை நோக்கம்.

மனித உடலில் பஞ்சபூதங்கள் ஆட்சி செலுத்துகின்றன. அவற்றில் நீர் (சிலோத்துமம், கபம்) என்றும், நெருப்பு (பித்தம்) என்றும், காற்று - (வாதம்) என்றும் கொள்ளப்படுகிறது. முதலாவதாக இவை தன் அளவில் அதிகமாகாமலும், குறையாமலும் இருக்கின்ற வரையில் உடலில் நோய் தோன்றாது. இவை அளவில்

nsp

மாறும்போது நோய் ஏற்படுகிறது. இரண்டாவது நம் உடலில் சேருகிற நச்சுப் பொருள். இது சரியாக வெளியேற்றப்படாமல் உடலில் நீண்ட காலம் தங்கும்போதும் நோய் ஏற்படும் என்பது சித்த மருத்துவம் தரும் நோய்க்கான இரண்டு காரணங்கள்.

சாதாரணக் காய்ச்சல் என்பது பொதுவாக மூன்று காரணங்களால் வரும். முதலாவது உடம்பில் பித்தம் அதிகமானால் வரக்கூடிய பித்த ஜுரம். இரண்டாவது நுரையீரல் சரியாக நச்சுப் பொருளை வெளியேற்றாததால் வரக்கூடிய கபஜுரம், மூன்றாவது நோய்த் தொற்றுக்களாலும், உடல் உறுப்புகள் அழற்சியாலும் நுண்ணுயிர் (Bacteria, virus) தாக்கத்தாலும் வரக்கூடிய ஜுரம். இந்த மூன்று வகை காரணங்களுக்குத் தரப்படும் சித்த மருந்துகள் வேறுவேறு. காய்ச்சல் என்பது ஓர் அடையாளமே தவிர நோய்க்கான காரணம் அல்ல.

**ம**ருத்துவர் என்பவர் யார்? இந்தக் கேள்விக்கு, நோய் அறிதல் (கண்டுபிடித்தல்) மருத்துவத் தாவரவியல், உயிர் வேதியியல், மருந்துகளைப் பக்குவப்படி முறையாகத் தயாரிக்கும் முறைகள், மருந்துகள் உடலில் இயங்குகின்ற முறைகள், மனித உடல் கூறு, வைத்தியத்தை வியாபாரம் ஆக்காத பண்பு, கருணை, தன்னுயிர் போல நோயாளியின் உயிரைக் கருதும் மனம் ஆகிய இந்த அனைத்தும் நிறைந்தவரே மருத்துவர், என்று சித்தர்கள் கூறுகிறார்கள்! தற்காலத்தில் இப்படி ஒரு மருத்துவரைப் பார்க்க முடியுமா? சித்தர்களே மருத்துவர்களாக வந்தால்தான் உண்டு.

நாடி, நயனம், நா, மொழி, சருமம், நிறம், நீர், மலம் இவற்றைக் கொண்டு நோய்களை அறியும் முறை சித்த மருத்துவத்தில் வழக்கில் இருந்து வருகின்றது. நாடி என்பது ஒரு குறிப்பிட்ட கால அளவில், எத்தனை முறை நாடி துடிக்கிறது என்று கணக்கெடுப்பது மட்டுமல்ல. வாத, பித்த, சிலோத்துமம் ஆகியவற்றின் ஆட்சி உடலில் எந்த அளவில் உள்ளது என்பதையும் தெரிந்து கொள்வது ஆகும். நாடி பார்த்தல் என்பது மிகப்பெரிய நுட்பமான அறிவியல் கலை. இன்ன இன்ன மாதங்களில் குறிப்பிட்ட நேரங்களில்தான் நாடி பார்க்க வேண்டும் என்பது சித்த மருத்துவ விதியாகும்.

நோயாளிகளின் புற அறிகுறிகள் நோயை அறிவதற்கு ஓரளவு உதவும். தலைவலி இருக்கும்போது கண்கள் இடுங்கி, சோர்ந்து, சிவந்து இருக்கலாம். Sinusitis எனப்படும் நீர்த்தேக்கம் இருக்கும்போது முகம் வீங்கி கண்கள் கலங்கி, தும்மலும் மூக்கில் நீர் வடிதலும் இருக்கலாம். முதுகுவலி, வயிற்றுவலி இருப்பவர்கள், சற்று முன்னால் வளைந்து நடப்பார்கள். குடல்பகுதியில் வாயு (Gas)

nsp

அதிகம் இருந்தால் வயிறு உப்பியும், நடை தளர்ந்தும் விடும்.

மொழி என்பது, நோயாளியிடம் மருத்துவர் கேட்கும் முதல் கேள்வியான உடம்புக்கு என்ன? என்பதற்கு நோயாளிகள் கூறும் அறிகுறிகள், அடையாளங்கள். இதை வைத்து நோயினை சிறிது ஊகிக்கலாம். சருமம், கண் (நயனம்), நகம், நாக்கு இவற்றின் நிறம், அமைப்பு ஆகியவற்றையும் சித்த மருத்துவர்கள் பரிசோதித்து நோயைக் கண்டுபிடிப்பார்கள். நோயாளியின் சிறுநீர், மலம் ஆகியவற்றைப் பரிசோதித்தலும் சித்த மருத்துவத்தில் உண்டு.

**உ**ணவே மருந்து. மருந்தே உணவு என்பது சித்த மருத்துவக் கொள்கையாகும். நாம் சாப்பிடுகின்ற உணவின் தூய்மை, அளவு, தன்மை, உணவு சமைக்கப்படும் பக்குவம் ஆகியவற்றைப் பொறுத்தே நம் உடல்நலமும், மனநலமும் உணர்ச்சிகளின் வெளிப்பாடும் அமைகின்றன. உடல் நோயின்றி நலமாக இருப்பதற்கு மனநலம் முதற்காரணம் என்கிறது சித்த மருத்துவம். மன அழுத்தமும், மனச் சோர்வும் தலைவலிக்கும், செரிமானக் கோளாறுகளுக்கும், நரம்பு மண்டலத்தின் பாதிப்புக்கும் காரணம் என்பது தற்கால மருத்துவ உலகம் ஒப்புக் கொள்கிற செய்தியாகும்.

மருந்தே உணவு என்கிறபோது, சித்த மருத்துவத்தில் 'பத்தியம்' என்று ஒரு வார்த்தை ஏன் சொல்லப்படுகிறது என்று நாம் சித்திக்க வேண்டும். இந்த பத்தியத்துக்கு பயந்துபோய் நம்மில் பல பேர் சித்த மருத்துவமே வேண்டாம் என்று நினைப்பதுண்டு. இதில் பயப்பட ஒன்றும் இல்லை. நாம் சாப்பிடும் உணவுப் பொருள்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு தன்மை கொண்டவை. எந்தக் காரணத்தால் நமக்கு நோய் வந்துள்ளதோ, அந்தக் காரணத்தை நீக்க மருந்து தரப்படுகிறது.

மருந்து சாப்பிடும்போது நாம் சாப்பிடும் உணவு அதே காரணத்தைத் தூண்டும் பொருளாக அமைந்துவிடக்கூடாது. அப்படி அமையும்போது எதிர் விளைவுகள் ஏற்படும். மருந்து பயன் தராமல் போய்விடும். எடுத்துக்காட்டாக செரிமான உறுப்புகள் சரியாக வேலை செய்யவில்லை. பசியே இல்லை என்று சித்த மருத்துவரிடம் நாம் சொல்லும்போது, நமக்கு செரிமான உறுப்புகளின் செயல்திறனை சரிப்படுத்தும் மருந்துகளை அவர் தருகிறார் என்றால் மாமிசம், கொழுப்பு, காரம் நிறைந்த உணவுப் பொருள்களை விலக்கச் சொல்லுவார். இதுதான் பத்தியம். ஏற்கெனவே பழுதடைந்த உறுப்புகளை சரிசெய்து கொண்டிருக்கும் போதே, அதிகமாக அவற்றை வேலை செய்ய வைப்பது என்பது

nsp

தவறல்லவா?

ஓர் இயந்திரம் பழுதுபட்டுப் போய்விட்டது. பழுதான இடத்தைக் கண்டுபிடித்து சரிசெய்ய முயற்சி செய்யப்படுகிறது. அப்போது அந்த இயந்திரம் நிறுத்தப்பட வேண்டும். இயந்திரமும் அதிகமாக வேலை செய்ய வேண்டும்; அதே சமயத்தில் பழுது பார்க்கவும் வேண்டுமென்பது நடக்காத காரியம். இதைப் போலத்தான் நம் உடலும். பத்தியம் என்பது, மருந்து விரைவாக முழுமையாக வேலை செய்ய வேண்டும் என்பதற்காக சொல்லப்படும் வழி முறைகள். இதைக் கடைப்பிடித்தால் நமக்கு நல்லது.

சித்த மருத்துவத்தில் உட்கொள்ளும் மருந்துகளோடு காந்த சிகிச்சை, யோகாசனப் பயிற்சிகள், நீர் மருத்துவம், இயற்கை மருத்துவம், வாழும் முறை ஆகியவையும் சேர்த்தே அளிக்கப்படுகின்றன. Magnetotherapy என்று தற்காலத்தில் கூறப்படும் காந்த சிகிச்சையை, தேரையரின் பாடலில் காணமுடிகிறது. ஆரம்ப நிலையிலுள்ள கழுத்துப்பிடிப்பு, முதுகுவலி, கைகால் மூட்டு வலி, ஆகியவற்றுக்கு யோகாசனப் பயிற்சிகள் மட்டுமே சித்த மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகின்றன.

**இயற்கை மருத்துவக் குறிப்புகள்!**

சித்த மருந்துகள் பொதுவாக பஸ்பம் (பொடி) கஷாயம், இலேகியம் ஆகிய விதங்களில் தரப்படுகின்றன. இப்போது மாத்திரை வடிவிலும் கிடைக்கின்றன.

இரண்டு மேசைக் கரண்டி வெந்தயத்தை இரவில் தண்ணீரில் ஊற வைக்கவும். காலையில் அதனுடன் ஒரு கைப்பிடி அளவு செம்பருத்தி இலை, ஒரு நெல்லிக்காய் சேர்த்து அரைத்து தலையில் தேய்த்து, பத்து நிமிடங்கள் கழித்து குளிக்க வேண்டும். ஒவ்வாமை (Allergy) ஏற்படுத்தாத இயற்கை ஷாம்பு இது. உடல் குளிர்ச்சியைத் தரும். நன்றாக தூக்கம் வரும்.

மாங்கொட்டை பருப்பு, கறிவேப்பிலை, சுண்டைக்காய் வற்றல், வெந்தயம், ஓமம் - இவற்றைச் சம அளவு எடுத்து வெறும் வாணலியில் இலேசாக வறுத்து நைஸாக பொடிக்கவும். காலை, மாலை, இரு வேளையும், புளிப்பில்லாத தயிரில் இரண்டு டீஸ்பூன் பொடியைக் கலக்கி சாப்பிட்டு வரவும். வயிற்று வலி, வயிற்றுக் கடுப்பு, பசியின்மை ஆகிய உபாதைகள் நீங்கும்.

*நன்றி:* Home Remedies for Common Ailments

nsp

மருந்துப் பொருள்களைச் சேர்த்துப் பொடியாக்கி, பக்குவம் செய்து, அவற்றை மரப்பட்டைகளால் ஆன தணல் குழியில் இட வேண்டும். நோயாளியை போர்வை கொண்டு போர்த்தி, (அதிலிருந்து கிளம்பும் புகையினை) உடல் முழுவதும் படுமாறு செய்து சருமத்திலிருந்த நச்சுக்களை அகற்றி, சரும நோய்களைக் குணப்படுத்தும் 'பாடாணப் புகை சிகிச்சை முறை' சித்த மருத்துவத்துக்கே உரியது.


சித்த மருத்துவத்தில் மணி, மந்திரம், மருந்து ஆகிய இம்மூன்றும் பயன் தருகின்றன. மணி என்ற சொல்லுக்கு சித்தர்களால் பல விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. பெரும்பாலாக காலம், நேரம் அறிதலே 'மணி' எனப்படுகிறது. பரம்பரை சித்த மருத்துவர்கள், 18 வகையான மணிகள் உண்டு எனவும் நோய்களின் தன்மைக்கேற்ப இம்மணிகளை மருந்துகளில் போட்டெடுத்து பின்னர் மருந்துகளை நோயாளிகளிடம் கொடுப்பார்கள் என்றும் கூறுகிறார்கள்.

மந்திரம் என்பது, குழந்தைகளுக்கு வரும் நோய்களைத் தீர்க்க, குறிப்பாக தோஷங்களைப் போக்க சித்தர்களால் பயன் படுத்தப்பட்டது. சித்தர்கள் கள்ளங்கபடமற்ற நிறைமனது உடைய வர்கள். அவர்கள் சொல்கின்ற மந்திரங்கள் அவற்றிற்குரிய பலன் களைத் தரும். சில சமயம், மந்திரங்களைச் செப்புத் தகட்டில் எழுதி தாயத்து செய்து, குழந்தைகளுக்குக் கட்டிவிடும் வழக்கமும் இருந்தது.

சித்த மருத்துவம், நோயால் ஏற்படும் சத்துக் குறைவை ஈடு கட்டும். உடல் வலிமையையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும். உடலிலிருந்து நச்சுப் பொருள்களை வெளியேற்றும், இரசாயனப் பொருள்கள் கலப்பில்லாத மருந்துகள் இவை. முக்கியமாக பக்கவிளைவுகள் இல்லாதவை. சித்தர்களால் மானுடத் துக்கு வழங்கப்பட்ட மிகப்பெரிய நன்கொடை சித்த மருத்துவ முறை. இந்த அருட்கொடையைப் பாதுகாத்து, வருங்கால சந்ததியினருக்குக் கொடுப்பது நமது கடமையல்லவா?

*(சித்தர் வரலாறு நிறைவு பெறுகிறது)*

nsp



மங்கையர் மலர் இதழில்
தொடராக வெளிவந்து
பல வாசகர்களின்
பாராட்டுதல்களைப் பெற்றது
'சிலிர்க்க வைக்கும் சித்தர் வரலாறு.'
அரிய செய்திகளாலும்,
தெளிந்த நோக்குகளை
முன்வைத்ததாலும் இந்தத் தொடர்
வாசக அன்பர்களால் பெரிதும்
வரவேற்கப்பட்டது.
சித்தர்களைப் பற்றிய
நிறைவான தகவல்களைக்
கொண்டுள்ள இந்த நூலை
நீங்கள் பயனுள்ளதாகக்
கருதுவீர்கள் என்பது
நிச்சயம்.

கல்கி பதிப்பகம்

**Silirkka Vaikkum**
**Sithar Varalaru**
**₹ 45**